TOASTMASTERS
INTERNATIONAL




# பேச்சுப் போட்டி **விதிப் புத்தகம்**

ஜூலை 1, 2022 முதல் ஜூன் 30, 2023 வரை

TOASTMASTERS INTERNATIONAL

**இங்கு தலைவர்கள்
உருவாக்கப்படுகிறார்கள்**

**TOASTMASTERS INTERNATIONAL**

**www.toastmasters.org**

© 2020 Toastmasters International. எல்லா உரிமைகளும் காக்கப்பட்டுள்ளன. Toastmasters International, Toastmasters International இலச்சினை மற்றும் அனைத்து Toastmasters International வணிகச்சின்னங்கள் மற்றும் பதிப்புரிமைகள் Toastmasters International நிறுவனத்தின் தனி உடைமை ஆகும். இவற்றை அனுமதியுடன் மட்டுமே பயன்படுத்தலாம்.

Rev. 01/2022

உருப்படி ta-IN1171

# உள்ளடக்கங்கள்


**அறிமுகம்** .......... 4

**பேச்சுப் போட்டி விதிகள்** .......... 5

அனைத்து Toastmasters பேச்சுப் போட்டிகளுக்குமான பொது விதிகள் .......... 5

பன்னாட்டுப் பேச்சுப் போட்டி விதிகள் .......... 25

மதிப்பீட்டுப் போட்டி விதிகள் .......... 28

நகைச்சுவைப் பேச்சுப் போட்டி விதிகள் .......... 29

உடனடிப் பேச்சுத் தலைப்புகள் (Table Topics®) போட்டி விதிகள் .......... 30

மிகைபடக்கூறும் கதைகள் போட்டி விதிகள் .......... 31

காணொளிப் பேச்சுப் போட்டி .......... 31

**பேச்சுப் போட்டி சோதனைப் பட்டியல்கள்** .......... 34

போட்டி அமர்வுத்தலைவரின் சோதனைப் பட்டியல் .......... 34

தலைமை நடுவரின் சோதனைப் பட்டியல் .......... 39

போட்டியாளரின் சோதனைப் பட்டியல் .......... 41

**பேச்சுப் போட்டி பொருட்கள்** .......... 42

**கூடுதல் வளங்கள்** .......... 44

# அறிமுகம்

பேச்சுப் போட்டிகள் Toastmasters கல்வித் திட்டத்தின் ஒரு முக்கியப் பகுதி ஆகும். அவை பேச்சின் அனுபவத்தைப் பெற Toastmastersக்கு வாய்ப்பு வழங்குகின்றன, மேலும் பிற Toastmastersக்கு சிறந்த பேச்சாளர்களை உற்றுநோக்கிக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றன.

இந்த சிற்றேடு, பன்னாட்டு, மதிப்பீடு, நகைச்சுவை, உடனடிப் பேச்சு (Table Topics®), மிகைபடக்கூறும் கதைப் பேச்சுப் போட்டிகள் ஆகியவற்றிற்கான விதிமுறைகள் மற்றும் நிலையான செயல்முறைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் ஒரு பேச்சுப் போட்டியை நடத்துவதில் சம்பந்தப்பட்டிருந்தால் அல்லது போட்டியிடுவதில் ஈடுபட்டிருந்தால், தயவுசெய்து இந்த விதிகளைக் கவனமாகப் படித்து அவற்றைப் பின்பற்றுங்கள். இவ்வாறு செய்வதின் மூலம், நீங்கள் நடுநிலையான பேச்சுப்போட்டி மற்றும் அனைவரும் மகிழக்கூடிய நிகழ்வினை உறுதி செய்யலாம்.

இந்தப் புத்தகம் மூன்று (3) பகுதிகளைக் கொண்டுள்ளது:

- **பேச்சுப் போட்டி விதிகள்.** இங்கு நீங்கள் எல்லா Toastmasters பேச்சுப் போட்டிகளுக்கான பொது விதிகள், மற்றும் பன்னாட்டு, மதிப்பீட்டு, நகைச்சுவை, உடனடிப் பேச்சு, மற்றும் மிகைபடக் கூறும் கதைப் பேச்சுப் போட்டிகளுக்கான குறிப்பிட்ட விதிகளையும் காணலாம்.
- **போட்டிக்கான சரிபார்ப்புப் பட்டியல்.** இந்தப் பிரிவு போட்டியின் அமர்வுத்தலைவர்கள், தலைமை நடுவர்கள், மற்றும் போட்டியாளர்கள் ஒரு பேச்சுப் போட்டிக்கு ஆயத்தமாவதற்குத் தேவையான சில பொதுவான படிகளை விவரிக்கிறது.
- **பேச்சுப் போட்டிப் பொருட்கள் மற்றும் கூடுதல் வளங்கள்.** இந்தப் பிரிவில் நீங்கள் Toastmasters பேச்சுப் போட்டிகளுக்குத் தொடர்பான வலைத்தளங்களின் பட்டியல் மற்றும் பிற உதவிப் பொருட்களைக் காணலாம்.

குறிப்பு: விதி மாற்றங்கள் ஒவ்வொரு ஆண்டும் நிர்வாக நெறிமுறையினால் பன்னாட்டுத் தலைவர், பன்னாட்டுத் தலைவர்-தேர்வு, மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்படுகின்றன. மாற்றங்கள் இடது விளிம்பின் ஓரத்தில் ஒரு (◆) குறியீட்டால் குறிக்கப்பட்டுள்ளன.

# பேச்சுப் போட்டி விதிகள்

## அனைத்து Toastmasters பேச்சுப் போட்டிகளுக்குமான பொது விதிகள்

வேறு வகையில் குறிப்பிடப்படாத வரை, இந்த விதிகள் Toastmasters International மன்றங்கள், பகுதிகள், கோட்டங்கள், மற்றும் மாவட்டங்களில் நடத்தப்படும் எல்லா பேச்சுப் போட்டிகள் மற்றும் பன்னாட்டு மாநாட்டில் நடத்தப்படும் எல்லாப் போட்டிகளுக்கும் பொருந்தும்.

### 1. பேச்சுப் போட்டி கொள்கை

◆ A. Toastmasters International (டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல் ) பின்வரும் அதிகாரப்பூர்வ பேச்சுப் போட்டிகளை அங்கீகரிக்கிறது மற்றும் ஆதரிக்கிறது: பன்னாட்டு, மதிப்பீட்டு, நகைச்சுவை, உடனடித் தலைப்புகள், மிகைபடக்கூறும் கதைகள், மற்றும் காணொளி (மாவட்டத்திற்குள் உட்படாத மன்றங்களின் உறுப்பினர்களுக்கு மட்டும், இதில் இடைக்கால மாவட்டங்கள் அடங்கும்). வேறு எந்த வகையான போட்டி, கண்காட்சிகள் போன்றவற்றை மாவட்டங்களால் (பகுதி மற்றும் கோட்டங்கள் உட்பட) மற்றும் இடைக்கால மாவட்டங்களால் (பகுதி மற்றும் கோட்டங்கள் உட்பட) நடத்தமுடியாது.

1. மாவட்டங்கள் (பகுதிகள் மற்றும் கோட்டங்கள் உட்பட) பன்னாட்டுப் பேச்சுப் போட்டியைக் கண்டிப்பாக நடத்த வேண்டும். பன்னாட்டுப் பேச்சுப் போட்டி ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.

◆ a) இடைக்கால மாவட்டங்கள் (பகுதிகள் மற்றும் கோட்டங்கள் உட்பட) சர்வதேசப் பேச்சுப் போட்டி விதிகளைப் பயன்படுத்தி ஆங்கிலத்தில் பேச்சுப் போட்டியை நடத்தலாம். இந்தப் போட்டி மாவட்ட நிலையைத் தாண்டி தொடராது. சர்வதேசப் பேச்சுப் போட்டி விதிகளைப் பயன்படுத்தும் போட்டிக்கு இடைக்கால பேச்சுப் போட்டி எனத் தலைப்பிடவேண்டும்.

◆ 2. மாவட்டங்கள் (பகுதிகள் மற்றும் கோட்டங்கள் உட்பட) மற்றும் இடைக்கால மாவட்டங்கள் (பகுதிகள் மற்றும் கோட்டங்கள்உட்பட) ஒவ்வொரு ஆண்டும் மூன்று (3) கூடுதல் ஆங்கிலப் பேச்சுப் போட்டிகள் வரை நடத்தலாம்.

◆ 3. மாவட்டங்கள் (பகுதிகள் மற்றும் கோட்டங்கள் உட்பட) மற்றும் இடைக்கால மாவட்டங்கள் (பகுதிகள் மற்றும் கோட்டங்கள் உட்பட) ஒவ்வொரு ஆண்டும் நான்கு (4) ஆங்கிலம் அல்லாத பேச்சுப் போட்டிகள் வரை நடத்தலாம்.

a) இந்தப் போட்டிகள் ஒவ்வொன்றும் மாவட்ட இயக்குனரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் மாவட்ட நிர்வாகக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஒரு மொழியில் நடத்தப்பட வேண்டும்.

b) ஆங்கிலம் அல்லாத போட்டிகள் விருப்பத்திற்கானவை மற்றும் அவை தொடர்புடைய ஆங்கில பேச்சுப் போட்டி விதிகளைப் பயன்படுத்தி நடத்தப்படலாம்.

c) சர்வதேச பேச்சுப் போட்டி விதிகளைப் பயன்படுத்தி நடத்தப்படும் ஆங்கிலம் அல்லாத போட்டிகள் மொழியின் பெயரைக் கொண்டு தலைப்பிடப்பட்டிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக: சீனப் பேச்சுப் போட்டி.

d) ஆங்கிலம் அல்லாத போட்டிகள் மாவட்ட நிலையைத் தாண்டித் தொடரக்கூடாது.

B. எல்லா மாவட்ட அளவிலான பேச்சுப் போட்டிகளும் ஆண்டு மாவட்ட மாநாட்டில் மட்டுமே நடத்தப்படும்.

C. போட்டிகள் மன்ற அளவில் தொடங்கி முறையே பகுதி, கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் தொடர வேண்டும். இந்த போக்கைப் பின்தொடரும் போட்டிகள் மட்டுமே பகுதி, கோட்டம் மற்றும் மாவட்ட அளவில் அனுமதிக்கப்படும். எல்லா மன்றங்களுக்கும் போட்டியாளர்களை, எல்லாப் போட்டிகளிலும் போட்டி மொழி அல்லது மன்றத்தின் முதன்மை மொழியைக் கருதாமல் பகுதி அளவில் முன்னேற்றிச் செல்லத் தகுதியுண்டு.

◆ 1. இடைக்கால மாவட்டங்களால் நடத்தப்படும் போட்டிகள் காணொளிப் பேச்சுப் போட்டியைத் தவிர்த்து, இதே முன்னேற்றத்தைப் பின்பற்ற வேண்டும்.

D. Toastmasters International, பன்னாட்டு மாநாட்டில் அரையிறுதி நிலையில் பன்னாட்டுப் பேச்சுப் போட்டியில் பங்கேற்கும் ஒவ்வொரு போட்டியாளருக்குமான பயணச் செலவுகளையும் வழங்குகிறது. பயணப் படிகள் மாவட்டத் தலைவருக்கான அதே முறையில் அதே கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு கணக்கிடப்படுகின்றன.

E. *பேச்சுப் போட்டி விதிப்புத்தகம்* என்பது நெறிமுறையாகும் மற்றும் எல்லா அதிகாரப்பூர்வ Toastmasters பேச்சுப் போட்டிகளுக்கும் பொருந்துகிறது. விதிகளுக்கான திருத்தங்களை நிர்வாக நெறிமுறை சீராய்வு செயல்முறை வழியாக மட்டுமே மேற்கொள்ளலாம். விதிவிலக்குகள் அனுமதிக்கப்படாது.

F. ஒரு போட்டிக்கான தனிப்பட்ட சேர்க்கை கட்டணம் பார்வையாளர்கள் மற்றும் போட்டி அதிகாரிகளிடம் வசூலிக்கப்படலாம். இருப்பினும், ஒரு போட்டியில் போட்டியிடுவதற்கு போட்டியாளர்களிடம் ஒருபோதும் கட்டணம் வசூலிக்கப்படாது. ஒரு போட்டியாளரை போட்டிக்கு அனுப்ப மன்றங்களிடம் ஒருபோதும் கட்டணம் வசூலிக்கப்படாது.

## 2. தகுதி

A. ஏதேனும் அதிகாரப்பூர்வ Toastmasters பேச்சுப் போட்டியில் போட்டியிடத் தகுதி பெற, ஒரு உறுப்பினர்:

1. அவர் போட்டியிடும் பகுதி, கோட்டம், மற்றும் மாவட்டத்திலுள்ள ஒரு மன்றத்தில் கட்டணம் செலுத்திய உறுப்பினராக இருக்க வேண்டும்.
   a) அந்த மன்றமும் நன்னிலையில் இருக்க வேண்டும்.
   b) ஒரு புதிய, இரட்டை, அல்லது மீண்டும் சேர்க்கப்பட்ட உறுப்பினர் உலகத் தலைமையகத்தில் தற்போதைய நிலுவைகள் மற்றும் உறுப்பினர்நிலை விண்ணப்பத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
2. போட்டியின் எல்லா நிலைகளிலும் தகுதியைப் பராமரியுங்கள்.
   a) ஏதேனும் ஒரு நிலையில் போட்டியாளர் முந்தைய நிலையில் போட்டியிடத் தகுதியற்றவர் என்பது தீர்மானிக்கப்பட்டால், அந்தப் போட்டியாளர் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும். இந்தத் தகுதியின்மை பிந்தைய நிலையில் கண்டறியப்பட்டு சரிசெய்யப்பட்டிருந்தாலும் கூட தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

B. பன்னாட்டுப் பேச்சுப் போட்டியில் பங்கேற்க, கூடுதலாக, ஒரு உறுப்பினர்:

◆ 1. Toastmasters Pathways கற்றல் அனுபவத்தில் ஏதேனும் ஒரு பாதையில் நிலை 1 மற்றும் 2-ஐ முடித்து, சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் அல்லது ஒரு மேன்மைமிகு சொல்வேந்தர் விருதினைப் பெற்றிருக்க வேண்டும்.
   a) இருப்பினும், மன்றப் போட்டிக்கு குறைந்தபட்சம் ஒரு (1) ஆண்டுக்கு முன்பாக சாசனம் செய்யப்பட்ட மன்றத்தின் ஒரு சாசன உறுப்பினர் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யாமலே போட்டியிட அனுமதிக்கப்படுவார். அந்த மன்றம் பகுதித் போட்டிக்கு முன்பாக அதிகாரப்பூர்வமாகச் சாசனம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

C. பின்வருபவர்கள் எந்த Toastmasters பேச்சுப் போட்டியிலும் போட்டியிடத் தகுதியற்றவர்கள்:

1. பதவியிலுள்ள பன்னாட்டு அதிகாரிகள் மற்றும் இயக்குனர்கள்
2. மண்டல ஆலோசகர்கள் அல்லது மண்டல ஆலோசகர் விண்ணப்பதாரர்கள்
3. ஜூன் 30 அன்று பதவிக் காலம் முடிவடையும் மவாட்ட அதிகாரிகள் :
   a) மாவட்ட இயக்குனர்
   b) திட்டத் தர இயக்குனர்
   c) மன்ற வளர்ச்சி இயக்குனர்
   d) நிர்வாக மேலாளர்
   e) நிதி மேலாளர்
   f) மக்கள் தொடர்பு மேலாளர்
   g) கோட்ட இயக்குனர்
   h) பகுதி இயக்குனர்

4. பன்னாட்டு அதிகாரி மற்றும் இயக்குனர் வேட்பாளர்கள்
5. சென்ற ஆண்டின் மாவட்ட இயக்குனர்கள்
6. மாவட்ட அதிகாரிகள்அல்லது ஜூலை 1 யிலிருந்து தொடங்கவிருக்கும் பதவிக்காலத்தின் நிலைகளுக்குதேர்வாகியுள் ளவேட்பாளர்கள்
7. பின்வரும் அளவுகோல்களைச் சந்திக்கும் போட்டி அதிகாரி அல்லது வழங்குனர் பங்கில் பணியாற்றும் உறுப்பினர்கள்:
   a) வாக்களிக்கும் நடுவர், சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் அல்லது தலைமை நடுவர் ஆக ஒரே போட்டி வகையில் எந்த ஒரு மாவட்டத்திலும் மன்ற நிலையைத் தாண்டி போட்டியிடக் கூடியவர்கள்.
   ◆ b) அவர்கள் போட்டியிடும் அதே போட்டியில் நேரக் கணக்காளர், வாக்குச்சீட்டு கணக்காளர் (கணக்காளர்), அவைக் காவலர் அல்லது பிற போட்டி அதிகாரியாகப் பங்கு கொண்டவர்.
   c) கல்வி அமர்வின் வழங்குனர், போட்டி அமர்வுத்தலைவர், போட்டி சொல்வேந்தார் அல்லதுபகுதி, கோட்டம் மற்றும் மாவட்ட நிகழ்வுகள் மற்றும் பன்னாட்டு மாநாடு உட்பட போட்டி நடைபெறும் நிகழ்வின்மாநாடு.
8. பன்னாட்டு மாநாட்டின் போது ஆகஸ்ட்டில் நடத்தப்பட்ட World Championship of Public Speaking® ல் வெற்றி பெற்றவர் பன்னாட்டுப் பேச்சுப் போட்டியின் எந்த நிலையிலும் மீண்டும் போட்டியிடத் தகுதியற்றவர்.
9. பன்னாட்டு மாநாட்டில் காணொளி பேச்சுப் போட்டி வெற்றியாளராக அறிவிக்கப்பட்டவர் மீண்டும் காணொளி பேச்சுப் போட்டியில் பங்கேற்கத் தகுதியற்றவர். காணொளிப் பேச்சுப் போட்டி வெற்றியாளர்கள் அடுத்து வரும் ஆண்டுகளில் எல்லா தகுதி தேவைகளையும் நிறைவு செய்தால் மீண்டும் பன்னாட்டுப் பேச்சுப் போட்டியில் போட்டியிடலாம்.
10. ஒன்றுக்கும் (1) மேற்பட்ட மன்றங்களில் உறுப்பினர்களாக இருக்கும் Toastmasters, எல்லா தகுதித் தேவைகளையும் நிறைவு செய்தால் அவர்கள் கட்டணம் செலுத்திய உறுப்பினர் உரிமை கொண்டுள்ள ஒவ்வொரு மன்றத்திலும் மன்றப் போட்டி(களில்) பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.
   a) எந்தப் போட்டியாளரும் ஒரு கொடுக்கப்பட்ட வகையில் ஒன்றுக்கும் (1) மேற்பட்ட பகுதி பேச்சுப் போட்டியில் போட்டியிட முடியாது, அந்த இரண்டு (2) பகுதிகளும் வெவ்வேறு கோட்டங்கள் அல்லது மாவட்டங்களில் இருந்தாலும் கூட.
11. மன்ற நிலையைத் தாண்டிய போட்டியில் பங்கேற்க ஒவ்வொரு போட்டியாளரும் இயல்நிலையில் வருகை தர வேண்டும். மன்ற நிலையைத் தாண்டி ஒலி, காணொளி, அல்லது பிற தொலைநிலை தொழில்நுட்பங்களினால் பங்கேற்க அனுமதிக்கப்படாது. (விதிவிலக்குகள்: பன்னாட்டுப் பேச்சுப் போட்டி மண்டல காலிறுதிகள் மற்றும் காணொளிப் பேச்சுப் போட்டி பங்கேற்பாளர்கள்.)

D. ஒரு Toastmasters பேச்சுப் போட்டியில் தலைமை நடுவர், வாக்களிக்கும் நடுவர், சமநிலையில் சீர்தூக்கும் நடுவராக இருக்க, நீங்கள் கீழே

அடையாளம் காணப்பட்ட தகுதித் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.

1. மன்ற போட்டியில், ஒரு கட்டண உறுப்பினராக இருக்க வேண்டும்.
2. பகுதி, கோட்டம், அல்லது மாவட்டப் போட்டியில்:
   a) குறைந்தபட்சம் ஆறு (6) மாதங்களுக்கு கட்டண உறுப்பினராக இருக்க வேண்டும்.
   b) "*Competent Communication*" கையேட்டில் ஆறு (6) பேச்சுத் திட்டங்களை முடித்திருக்க வேண்டும் அல்லது Toastmasters Pathways கற்றல் அனுபவத்தில் ஏதேனும் ஒரு பாதையில் நிலை 1 மற்றும் 2 ஐ முடித்து சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
      1. அவர்கள் மண்டலத்ததிற்கான Pathways வெளியீட்டிற்கு முன்பாக Toastmasters ல் சேர்ந்த உறுப்பினர்கள் மட்டுமே *Competent Communication* கையேட்டிலிருந்து நடுவர் தகுதி வரையில் பேச்சுப் போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும்.
   c) நீங்கள் பணியாற்றும் போட்டியில் இயல்நிலையில் இருக்க வருகை தந்திருக்க வேண்டும்.
3. பன்னாட்டுப் பேச்சுப் போட்டி மண்டல காலிறுதிகள், அரையிறுதிகள் மற்றும் World Championship of Public Speaking® ல்:
   a) குறைந்தபட்சம் ஆறு (6) மாதங்களுக்கு கட்டண உறுப்பினராக இருக்க வேண்டும்.
      ◆ 1. அந்த மன்றமும் நன்னிலையில் இருக்க வேண்டும்.
   b) குறைந்தபட்சம் ஒரு மேம்பட்ட சொல்வேந்தர் வெண்கலம் அல்லது மேம்பட்ட தொடர்பாளர் வெண்கலம் ஆக இருக்க வேண்டும், அல்லது Toastmasters Pathways கற்றல் அனுபவத்தில் குறைந்த பட்சம் ஒரு (1) path முடித்திருக்க வேண்டும்.
      1. அவர்களின் மண்டலத்திற்கான Pathways வெளியீட்டிற்கு முன்பாக Toastmasters ல் சேர்ந்த உறுப்பினர்கள் மட்டுமே Competent Communication கையேட்டிலிருந்து நடுவர் தகுதி வரையில் பேச்சுப் போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும்.
   c) பகுதி, கோட்டம், மாவட்டம், அல்லது அரையிறுதி நிலையில் Toastmasters பேச்சுப் போட்டி நடுவராக இருந்திருக்க வேண்டும்.

E. பிற அனைத்து போட்டி அதிகாரிகளும் மதிப்பீட்டு போட்டி இலக்கு பேச்சாளர்களும் கட்டண உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

◆ F. வரவிருக்கும் ஜூலை 1 ஆம் தேதி அன்று தொடங்கும் பதவிக்காலத்திற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத் தலைமைப் பதவிகளுக்கான வேட்பாளர்கள் போட்டி அதிகாரியாக அல்லது பகுதி, கோட்டம் அல்லது மாவட்ட அளவில் சோதனைப் பேச்சாளராக பணியாற்ற தகுதி பெறமாட்டார்கள்.

## 3. தேர்வு வரிசை

A. மன்றம், பகுதி, கோட்டம், மாவட்டம். நல்ல நிலையிலுள்ள ஒவ்வொரு மன்றமும் ஒவ்வொரு பகுதி பேச்சுப் போட்டிக்கும் அதன் போட்டியாளர்களை மன்றம் விரும்பும் முறையில் தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்படுகிறது. ஒரு மன்றப் போட்டி நடத்தப்பட்டால், அது

இந்த விதிப்புத்தகத்தில் உள்ள விதிகளுக்கு இணங்க வேண்டும், மற்றும் போட்டியின் முடிவுகள் இறுதியானது. போட்டிகள் பகுதி, கோட்டம் மற்றும் மாவட்ட நிலைகளில் நடத்தப்பட வேண்டும். பகுதி பேச்சுப் போட்டி வெற்றியாளர் அதன் பின் கோட்டப் போட்டிக்குச் செல்வார். கோட்டப் போட்டி வெற்றியாளர் அதன் பின் மாவட்டப் போட்டிக்குச் செல்வார்.

1. 10 அல்லது அதற்கு மேற்பட்ட கோட்டங்கள் உள்ள மாவட்டங்களில், மாவட்டப் போட்டி இறுதிகளுக்கு முன்பாக கோட்ட வெற்றியாளர்களுக்கு இடையே இரண்டு (2) கூடுதல் போட்டிகள் நடத்தப்படலாம்.
   a) நடைமுறையில் உட்படும் வகையில், ஒவ்வொரு கூடுதல் போட்டியில் பங்கேற்கும் கோட்டங்களின் எண்ணிக்கையும் சமமாக இருக்கும்.
   b) ஒவ்வொரு கூடுதல் போட்டியிலிருந்தும் மூன்று (3) உயர்ந்த நிலைகளைப் பெற்ற அங்கு இருக்கும் போட்டியாளர்கள் அதன்பின் மாவட்டப் போட்டிக்கு முன்னேறிச் செல்வார்கள். கூடுதல் போட்டியின் நிலைகள் அறிவிக்கப்படாது.
2. ஒரு மன்றம், பகுதி, அல்லது கோட்ட போட்டி வெற்றியாளரால் அடுத்த நிலை போட்டியில் பங்கேற்க இயலவில்லை எனில், உயர்ந்த நிலையைப் பெற்ற அங்கு இருக்கும் போட்டியாளர் அந்த அடுத்த நிலைக்கு முன்னேறிச் செல்வார்.
3. மாவட்ட நிலையைத் தாண்டி மண்டல காலிறுதிகள், அரையிறுதிகள், மற்றும் World Championship of Public Speaking® க்கு செல்லும் ஒரு போட்டி பன்னாட்டுப் பேச்சுப் போட்டி மட்டுமே ஆகும்.
4. ◆ மாவட்ட அளவிலான போட்டியில் வெற்றி பெறுபவர் மண்டல காலிறுதியில் பங்கேற்க முடியாவிட்டால், அடுத்த உயர்ந்த நிலையைப் பெறும் போட்டியாளர் அந்த நிலைக்கு முன்னேறுவார்.
5. பன்னாட்டுப் பேச்சுப் போட்டியில் ஒரு மண்டல காலிறுதி போட்டியாளர் அரையிறுதிச் சுற்றில் பங்கேற்க இயலவில்லை எனில், அடுத்த உயர்ந்த நிலையிலுள்ள போட்டியாளர் உலகத் தலைமையகத்தால் தொடர்பு கொள்ளப்படுவார்.

B. பகுதிப் போட்டிக்கு எட்டு (8) வாரங்களுக்கு முன்னர், ஒரு பகுதியில் நான்கு (4) ஒதுக்கப்பட்ட மன்றங்கள் அல்லது அதற்கும் குறைவாக நன்னிலையில் இருந்தால், ஒவ்வொரு மன்றத்திலிருந்தும் இரண்டு (2) போட்டியாளர்களை பகுதிப் போட்டியில் போட்டியிட அனுமதிக்க மாவட்டங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

1. பகுதிப் போட்டிக்கு முன்னர் கூடுதல் மன்றங்கள் சாசனம் செய்யப்பட்டால், ஒவ்வொரு மன்றத்திலிருந்தும் இரண்டு (2) போட்டியாளர்கள் போட்டியிட அனுமதிக்கப்படுவார்கள்.

2. நான்கு (4) ஒதுக்கப்பட்ட பகுதிகள் அல்லது அதற்கும் குறைவாக உள்ள கோட்டங்களில், ஒவ்வொரு பகுதியிலிருந்தும் கிடைக்கக்கூடிய இரண்டு (2) உயர்ந்த நிலையில் உள்ள போட்டியாளர்களை போட்டியிட அனுமதிக்க மாவட்டங்களுக்கு வாய்ப்பு உள்ளது.
3. நான்கு (4) ஒதுக்கப்பட்ட கோட்டங்கள் அல்லது அதற்கும் குறைவாக உள்ள மாவட்டங்களில், ஒவ்வொரு கோட்டங்களிலிருந்தும் கிடைக்கக்கூடிய இரண்டு (2) உயர்ந்த நிலையில் உள்ள போட்டியாளர்களை போட்டியிட அனுமதிக்க மாவட்டங்களுக்கு வாய்ப்பு உள்ளது.
4. இரண்டு (2) போட்டியாளர்களை மன்றத்தில் இருந்து பகுதிக்கு, பகுதியிலிருந்து கோட்டத்திற்கு, மற்றும் / அல்லது கோட்டத்திலிருந்து மாவட்டத்திற்கு முன்னேற அனுமதிக்கலாமா வேண்டாமா என்ற முடிவு போட்டிச் சுழற்சி தொடங்குவதற்கு முன்பாக எடுக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் தொடர்புபடுத்தப்பட வேண்டும், அதாவது, எந்தவொரு மன்றப் போட்டிகளும் நடத்தப்படுவதற்கு முன்பாக.
   a) முடிவு எடுக்கப்பட்டதும், அம்முடிவு அதனால் தாக்கம் ஏற்படும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மன்றங்கள், பகுதிகள் மற்றும் கோட்டங்கள் முழுவதும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
   b) ஒரு மாவட்டம் இரண்டு (2) போட்டியாளர்களை மன்றத்தில் இருந்து பகுதிக்கு முன்னேற அனுமதிக்க முடிவு செய்தால், பகுதியிலிருந்து கோட்டத்திற்கு மற்றும் / அல்லது கோட்டத்திலிருந்து மாவட்டத்திற்கு முன்னேறும் நபர்களின் எண்ணிக்கைப் பற்றிய அதன் முடிவுகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டியதில்லை.
5. எப்போதாவது, ஒரு போட்டி ஒரே ஒரு (1) போட்டியாளருடன் நடத்தப்படும். அதுபோன்ற நிகழ்வுகளில், ஒரு போட்டி நடத்தப்பட வேண்டும், மற்றும் போட்டியாளர் நேரம், அசல்தன்மை, மற்றும் தகுதித் தேவைகளை நிறைவு செய்யவில்லையெனில் அவர் தகுதி நீக்கப்பட வேண்டும்.

## 4. பேச்சுப் பொருள் மற்றும் தயாராதல்

A. அனைத்துப் பன்னாட்டு, நகைச்சுவை மற்றும் மிகைபடக் கூறும் கதைகள் போட்டி பேச்சுகளின் பொருளும் போட்டியாளரால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

B. உடனடிப் பேச்சுப் போட்டி பேச்சுகளின் பொருள், இந்த விதிப் புத்தகத்தின் உடனடிப் பேச்சுப் போட்டி பிரிவில் திட்டவரையப்பட்டுள்ளபடி, போட்டியின் அமர்வுத் தலைவரால் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

C. மதிப்பீட்டுப் போட்டிப் பேச்சுகளின் பொருள், இந்த விதிப் புத்தகத்தின் மதிப்பீட்டு போட்டிப் பிரிவில் திட்டவரையப்பட்டுள்ள படி, இலக்கு பேச்சாளரின் வாய்மொழி மதிப்பீட்டுகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

D. போட்டியாளர்கள் தங்களின் சொந்தப் பேச்சுகளை உருவாக்க வேண்டும், மேலும் ஒவ்வொன்றும் குறிப்பிடத்தக்க அளவில் அசலானதாக இருக்க வேண்டும்.

1. பேச்சின் இருபத்தைந்து சதவீதம் அல்லது அதற்குக் குறைவாக மேற்கோளிடல், பொழிப்புரை, அல்லது மற்றொரு நபரின் உள்ளடக்கத்தை குறிப்பிடுவதற்கு ஒதுக்கப்படலாம். ஏதேனும் மேற்கோளிட்ட, பொழிப்புரைத்த, அல்லது குறிப்பிடப்பட்ட உள்ளடக்கம் பேச்சு விளக்கவுரையின் போது அடையாளப்படுத்தப்பட வேண்டும்.
2. அனைத்துப் போட்டிகளுக்கு முன்பும், ஒவ்வொரு போட்டியாளரும், அவர்களின் பேச்சின் உள்ளடக்கம் குறிப்பிடத்தக்க அளவில் அசலானதாக உள்ளது அல்லது இருக்கும் என Speaker's Certification of Eligibility and Originality (உருப்படி 1183, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பயன்படுத்தி, தலைமை நடுவரிடம் எழுத்துப்பூர்வமாக சான்றளிக்க வேண்டும்.

◆ E. ஒரு போட்டியாளர் மற்றொரு போட்டியாளரை, அல்லது மற்றொரு போட்டியாளரால் வழங்கப்பட்ட பேச்சினை, அவர்கள் போட்டியிடும் அதே போட்டியில் அவர்களது பேச்சில் குறிப்பிடக் கூடாது.

F. அனைத்துப் போட்டியாளர்களும் போட்டியின் அமர்வுத் தலைவரால் ஒதுக்கப்படும் அதே தளம் அல்லது பகுதியிலிருந்து பேச வேண்டும்.

1. அனைத்து போட்டியாளர்கள், தலைமை நடுவர், வாக்களிக்கும் நடுவர், மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவருக்கும் பேசும் பகுதி குறித்து போட்டி தொடங்குவதற்கு முன்பாகத் தெரிவிக்கப்படும்.
2. ஒரு சாய்மேசை/பிரசங்க மேடை இருக்கும். எனினும், சாய்மேசை/பிரசங்க மேடைப் பயன்பாடு விருப்பத்துக்குட்பட்டதாகும்.
3. ஒலிப்பெருக்கம் அவசியமானால், ஒலிவாங்கி பொருத்தப்பட்ட ஒரு சாய்மேசை/பிரசங்க மேடை மற்றும் ஒரு கையடக்க ஒலிவாங்கி கிடைக்கச் செய்ய வேண்டும்.
4. போட்டிக்கு முன்னர் எல்லா போட்டியாளரும் பயிற்சி பெற, எல்லா கருவிகளும் தயாராக இருக்க வேண்டும். போட்டியாளர்கள் சாய்மேசை/பிரசங்க மேடை ஒலிவாங்கி மற்றும் பிற கருவிகளை அவர்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பாக தங்களுக்கு விருப்பமான அமைப்பில் அமைதியாக ஏற்பாடு செய்ய பொறுப்பாவார்கள்.

## 5. பொதுவான செயல்முறை

A. Toastmasters பேச்சுப் போட்டியின் ஒவ்வொரு நிலையிலும், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும் அதிகாரிகள் தேவைப்படுவர்.

1. மன்றப் போட்டிகளில், ஒரு போட்டி அமர்வுத்தலைவர், தலைமை நடுவர், குறைந்தது ஐந்து (5) வாக்களிக்கும் நடுவர்கள், ஒரு சமநிலையில் சீர்தூக்கும் நடுவர், இரண்டு (2) வாக்குச்சீட்டு கணக்காளர்கள் மற்றும் இரண்டு (2) நேரக்காப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.
2. பகுதித் போட்டிகளில், பகுதியின் ஒவ்வொரு மன்றத்திலிருந்து சம எண்ணிக்கையிலான வாக்களிக்கும் நடுவர்கள், அல்லது குறைந்தபட்சம் ஐந்து (5) வாக்களிக்கும் நடுவர்கள் இருக்க வேண்டும். இந்த வாக்களிக்கும் நடுவர்களுடன் கூடுதலாக, ஒரு போட்டியின் அமர்வுத்தலைவர், தலைமை நடுவர், சமநிலையில் சீர்தூக்கும் நடுவர், இரண்டு (2) வாக்குச்சீட்டு கணக்காளர்கள், மற்றும் இரண்டு (2) நேரக்காப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
3. கோட்டப் போட்டிகளில், கோட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் சம எண்ணிக்கையிலான வாக்களிக்கும் நடுவர்கள், அல்லது குறைந்தபட்சம் ஏழு (7) வாக்களிக்கும் நடுவர்கள் இருக்க வேண்டும். இந்த வாக்களிக்கும் நடுவர்களுடன் கூடுதலாக, ஒரு போட்டியின் அமர்வுத்தலைவர், தலைமை நடுவர், சமநிலையில் சீர்தூக்கும் நடுவர், இரண்டு (2) வாக்குச்சீட்டு கணக்காளர்கள், மற்றும் இரண்டு (2) நேரக்காப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். தலைமை நடுவர், வாக்களிக்கும் நடுவர்கள், மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் ஆகியோர் போட்டியாளர் உறுப்பினராக உள்ள எந்த மன்றத்திலும் உறுப்பினராக இருக்கக் கூடாது.
4. மாவட்டப் போட்டிகளில், மாவட்டத்தின் ஒவ்வொரு கோட்டத்திலிருந்து சம எண்ணிக்கையிலான வாக்களிக்கும் நடுவர்கள், அல்லது குறைந்தபட்சம் ஏழு (7) வாக்களிக்கும் நடுவர்கள் இருக்க வேண்டும். இந்த வாக்களிக்கும் நடுவர்களுடன் கூடுதலாக, ஒரு போட்டியின் அமர்வுத்தலைவர், தலைமை நடுவர், சமநிலையில் சீர்தூக்கும் நடுவர், மூன்று (3) வாக்குச்சீட்டு கணக்காளர்கள், மற்றும் இரண்டு (2) நேரக்காப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். தலைமை நடுவர், வாக்களிக்கும் நடுவர்கள், மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் ஆகியோர் போட்டியாளர் உறுப்பினராக உள்ள எந்த மன்றத்திலும் உறுப்பினராக இருக்கக் கூடாது.
5. பன்னாட்டுப் பேச்சுப் போட்டி மண்டல காலிறுதிகளுக்கு, ஒவ்வொரு போட்டிக்கும் குறைந்தபட்சம் ஒன்பது (9) வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும் ஒரு (1) சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் இருக்க வேண்டும். பதவிக்காலம் முடிந்த சென்ற ஆண்டின் பன்னாட்டுத் தலைவர்

எல்லா மண்டல காலிறுதிகளுக்கும் தலைமை நடுவராக இருப்பார். பதவிக்காலம் முடிந்த சென்ற ஆண்டின் பன்னாட்டுத் தலைவர் தலைமை நடுவராக பணியாற்ற இயலவில்லை எனில், முதல் துணைத் தலைவர் மற்றொரு கடந்தகால பன்னாட்டுத் தலைவரை நியமிப்பார். எந்த வாக்களிக்கும் நடுவர் அல்லது சமநிலையில் சீர்தூக்கும் நடுவரும் போட்டியாளர் உறுப்பினராக உள்ள அதே மண்டலத்தில் உறுப்பினராக இருக்க முடியாது. எந்த வாக்களிக்கும் நடுவர் அல்லது சமநிலையில் சீர்தூக்கும் நடுவரும் போட்டியாளர் உறுப்பினராக உள்ள அதே மண்டலத்தில் உறுப்பினராக இருக்க முடியாது.

6. பன்னாட்டுப் பேச்சுப் போட்டி மண்டல அரையிறுதிகளுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சம எண்ணிக்கையில் வாக்களிக்கும் நடுவர், அல்லதுகுறைந்தபட்சம் ஒன்பது (9) வாக்களிக்கும் நடுவர்கள் இருக்க வேண்டும். இந்த வாக்களிக்கும் நடுவர்களுடன் கூடுதலாக, ஒரு போட்டியின் அமர்வுத்தலைவர், தலைமை நடுவர், சமநிலையில் சீர்தூக்கும் நடுவர், மூன்று (3) வாக்குச்சீட்டு கணக்காளர்கள், மற்றும் இரண்டு (2) நேரக்காப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். தலைமை நடுவர், வாக்களிக்கும் நடுவர்கள், மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் ஆகியோர் போட்டியாளர் உறுப்பினராக உள்ள எந்த மன்றத்திலும் உறுப்பினராக இருக்கக் கூடாது.
7. World Championship of Public Speaking ல், ஒவ்வொரு மண்டலத்தையும் பிரதிநிதிப்படுத்த ஒரு (1) வாக்களிக்கும் நடுவர் இருக்க வேண்டும். இந்த வாக்களிக்கும் நடுவர்களுடன் கூடுதலாக, ஒரு போட்டியின் அமர்வுத்தலைவர், ஐந்து (5) தகுதிகாண் நடுவர்கள், ஒரு சமநிலையில் சீர்தூக்கும் நடுவர், மூன்று (3) வாக்குச்சீட்டு கணக்காளர்கள், மற்றும் இரண்டு (2) நேரக்காப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் பதவிக்காலம் முடிந்த சென்ற ஆண்டின் பன்னாட்டுத் தலைவர் World Championship of Public Speaking இன் தலைமை நடுவராக இருப்பார். பதவிக்காலம் முடிந்த சென்ற ஆண்டின் பன்னாட்டுத் தலைவர் தலைமை நடுவராக பணியாற்ற இயலவில்லை எனில், முதல் துணைத் தலைவர் மற்றொரு கடந்தகால பன்னாட்டுத் தலைவரை நியமிப்பார். தலைமை நடுவர், வாக்களிக்கும் நடுவர்கள், மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் ஆகியோர் போட்டியாளர் உறுப்பினராக உள்ள எந்த மன்றத்திலும் உறுப்பினராக இருக்கக் கூடாது
8. வாக்களிக்கும் நடுவர்கள் சாத்தியமாகும் போது எல்லா நிலைகளிலும் அநாமதேயமாக இருக்க வேண்டும்.
9. ◆ போட்டியின் அமர்வுத் தலைவர் ஒரு போட்டிச் சொல்வேந்தரை நியமிக்கலாம். அதுபோன்ற நிகழ்வுகளில், "போட்டி சொல்வேந்தர்" என்ற தொடர் போட்டி அமர்வுத் தலைவரை ஆதரிக்கும் உறுப்பினருக்குப் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு போட்டி Toastmaster அவர் பணியாற்றும் போட்டியில் பங்கேற்கத் தகுதியற்றவர் ஆவார்.

10. போட்டி அதிகாரிகள் அதே பகுதி, கோட்டம், மாவட்டம், மண்டல காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதி நிலையில் ஒரே போட்டியில் ஒன்றுக்கு (1) மேற்பட்ட பங்குளை வகிக்கக் கூடாது.

B. போட்டிக்கு முன்பாக, போட்டியாளர்கள் விதிகள் குறித்து போட்டியின் அமர்வுத்தலைவரால் விளக்கப்படுவார்கள். பின்னர் போட்டியாளர்கள் தங்களின் பேசும் இடத்திற்கு போட்டியின் அமர்வுத்தலைவருடன் செல்வார்கள்.

C. விளக்கத்தின் போது ஒரு போட்டியாளர் இல்லையெனில், முதன்மைப் போட்டியாளருக்குப் பதிலாக மாற்று பேச்சாளர் இருந்தால், அவரது இடத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.

1. போட்டியை நடத்துபவர் அறிமுகப்படுத்தப்படும் போது முதன்மைப் போட்டியாளர் இல்லையெனில், முதன்மைப் போட்டியாளர் தகுதிநீக்கம் செய்யப்பட்டு மாற்று போட்டியாளர் அதிகாரப்பூர்வமாக போட்டியாளர் ஆகிறார்.
2. முதன்மைப் போட்டியாளர் விளக்கத்திற்குப் பின் ஆனால் போட்டியை நடத்துபவர் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பாக வந்தால், முதன்மைப் போட்டியாளர் போட்டியிட அனுமதிக்கப்படுவார்:
   a) அவர் வந்த உடன் போட்டியின் அமர்வுத்தலைவருக்கு தெரிவித்திருக்கிறார்.
   b) போட்டியை நடத்துபவர் போட்டியைத் தொடங்குவதற்காக அறிமுகப்படுத்தப்படும் முன்பாக எல்லா தேவையான காகிதப்பணிகளையும் சரியான வரிசையில் வைத்திருக்கிறார்.
   c) விளக்கத்திற்கான வாய்ப்பினைக் கைவிடுகிறார்.

D. போட்டிக்கு முன்பாக, வாக்களிக்கும் நடுவர்கள், வாக்குச்சீட்டு கணக்காளர்கள், மற்றும் நேரக்காப்பாளர்களுக்கு அவர்களின் பொறுப்புகள் குறித்து தலைமை நடுவர் விளக்குவார்.

1. ஒவ்வொரு வாக்களிக்கும் நடுவரும் போட்டிக்கான பொருத்தமான வாக்குச் சீட்டைப் பெறுகிறார்.
   a) பன்னாட்டுப் பேச்சுப் போட்டி வாக்களிக்கும் நடுவர் International Speech Contest Judge's Guide and Ballot (உருப்படி 1172, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுகிறார்.
   b) மதிப்பீட்டுப் போட்டி வாக்களிக்கும் நடுவர் Evaluation Contest Judge's Guide and Ballot (உருப்படி 1179, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுகிறார்.
   c) நகைச்சுவைப் பேச்சுப் போட்டி வாக்களிக்கும் நடுவர் Humorous Speech Contest Judge's Guide and Ballot (உருப்படி1191, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுகிறார்.
   d) உடனடிப் பேச்சுப் போட்டி வாக்களிக்கும் நடுவர்கள் Table Topics Contest Judge's Guide and Ballot (உருப்படி1180, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுகிறார்கள்.
   e) மிகைபடக் கூறும் கதைகள் போட்டி வாக்களிக்கும் நடுவர்கள் Tall Tales Contest Judge's Guide and Ballot (உருப்படி 1181, ஆங்கிலத்தில் மட்டும்) ) ஐப் பெறுவார்கள்.

f) எல்லா வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவரும் Judge’s Certification of Eligibility and Code of Ethics (உருப்படி 1170, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுவார்கள். இப்படிவம் கையொப்பமிடப்பட்டு தலைமை நடுவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

2. நேரக்கணக்காளர்கள் Speech Contest Time Record Sheet and Instructions for Timers (உருப்படி 1175, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுவார்கள். தேவைப்பட்டால் அவர்கள் காலக் கருவியை முறையாகப் பயன்படுத்துவது தொடர்பான அறிவுறுத்தல்களையும் பெறுவார்கள்.

3. வாக்குச்சீட்டு கணக்காளர்கள் Counter’s Tally Sheet (உருப்படி 1176, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுவார்கள். தேவைப்பட்டால், அவர்கள் வாக்குச்சீட்டுகளைச் சேகரித்தல் மற்றும் கணக்கிடும் அறை செயல்முறைகள் (கீழே விவரிக்கப்பட்டுள்ளது) பற்றிய அறிவுறுத்தல்களையும் பெறுவார்கள்.

E. போட்டிக்கு முன்பாக, முதன்மை நடுவர் சமநிலையில் சீர்தூக்கும் நடுவராகச் செயல்பட ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கிறார்.

1. சமநிலையில் சீர்தூக்கும் நடுவரின் அடையாளம் இரகசியமானதாகும், இது தலைமை நடுவருக்கு மட்டுமே தெரியும்.

2. சமநிலையில் சீர்தூக்கும் நடுவர், நடுவர்களுக்கான விளக்கத்தில் கலந்துக் கொள்ள மாட்டார்.

3. முதன்மை நடுவர் சமநிலையில் சீர்தூக்கும் நடுவருக்கான வழிகாட்டி மற்றும் வாக்குச்சீட்டினை போட்டியின் தொடக்கத்தில் வழங்குவார்.

a) பன்னாட்டுப் பேச்சுப் போட்டி சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் international Speech Contest Tie breaking Judge’s Guide and Ballot (உருப்படி 1188,ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுகிறார்.

b) மதிப்பீட்டுப் போட்டி சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் Evaluation Contest Tie breaking Judge’s Guide and Ballot (உருப்படி 1179A, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுவார்.

c) நகைச்சுவை பேச்சுப் போட்டி சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் Humorous Speech Contest Tie breaking Judge’s Guide and Ballot (உருப்படி 1191A, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுவார்.

d) உடனடி பேச்சுப் போட்டி சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் Topics Contest Tie breaking Judge’s Guide and Ballot (உருப்படி 1180A, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுவார்.

e) மிகைபடக் கூறும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் Tall Tales Contest Tie breaking Judge’s Guide and Ballot (உருப்படி 1181A, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பெறுவார்.

F. பன்னாட்டு, நகைச்சுவை, மற்றும் மிகைபடக் கூறும் கதைகள் போட்டிகளுக்கு, போட்டி அமர்வுத்தலைவர் ஒவ்வொரு போட்டியாளரையும், போட்டியாளரின் பெயர், பேச்சுத் தலைப்பு, பேச்சுத் தலைப்பு, மற்றும் போட்டியாளரின் பெயர் மூலம் அறிமுகப்படுத்த வேண்டும்.

1. உடனடித் தலைப்புகள் போட்டிகளுக்கு, போட்டியின் அமர்வுத்தலைவர் ஒவ்வொரு போட்டியாளரையும், போட்டியாளரின், பெயர், தலைப்பு, தலைப்பு, மற்றும் போட்டியாளரின் பெயர் ஆகியவற்றின் மூலம் அறிமுகப்படுத்த வேண்டும்.
2. மதிப்பீட்டுப் போட்டிகளுக்கு, போட்டியின் அமர்வுத்தலைவர் ஒவ்வொரு போட்டியாளரையும், போட்டியாளரின் பெயரை இருமுறை அறிவித்து அறிமுகப்படுத்த வேண்டும்.

G. பன்னாட்டு, நகைச்சுவை, மற்றும் மிகைபடக்கூறும் கதைகள் போட்டிகளுக்கான போட்டியாளர்கள் போட்டி நடைபெறும் நேரம் முழுவதும் ஒரே அறையில் இருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

H. மதிப்பீட்டுப் போட்டிப் பங்கேற்பாளர்கள், இந்த விதிப்புத்தகத்தின் மதிப்பீட்டுப் போட்டிப் பிரிவில் திட்டவரையறுத்த படி, இலக்குப் பேச்சை வழங்கிய பின் அறையை விட்டு வெளியேற வேண்டும்.

I. உடனடிப் பேச்சுப் போட்டி போட்டியாளர்கள், இந்த விதிப்புத்தகத்தின் உடனடிப் பேச்சுப் போட்டிப் பிரிவில் திட்டவரையறுத்த படி, முந்தைய போட்டியாளர் தலைப்புக்கான பதிலை முடிக்கும் வரையில் அறையை விட்டு விலகி இருக்க வேண்டும்.

J. போட்டியாளர் பேச்சுகளுக்கு இடையில் ஒரு (1) நிமிட அமைதி இருக்கும், இதில் வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் தங்களது வாக்குச்சீட்டில் வாக்குகளைக் குறிப்பார்கள். அனைத்து வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் போட்டியாளர்களை மதிப்பிடுவர்; தலைமை நடுவர் போட்டியாளர்களை மதிப்பிட மாட்டார்.

◆ K. கடைசிப் போட்டியாளர் பேசி முடித்ததும், போட்டியின் அமர்வுத்தலைவர், வாக்குச்சீட்டு கணக்காளர்கள் அனைத்து வாக்குச்சீட்டுகளையும் சேகரிக்கும் வரையில் அமைதியாக இருக்கும்படி கோருவார். அனைத்து வாக்குச் சீட்டுகளும் சேகரிக்கப்பட்டதும் தலைமை நடுவர் போட்டி அமர்வுத் தலைவருக்கு அறிவிப்பார். இந்த அறிவிப்பைப் பெற்ற பின்புதான் போட்டி மீண்டும் தொடங்கப்பட வேண்டும்.

1. ஒரு வாக்குச்சீட்டு செல்லுபடியாக, நடுவர்கள்:
   a) முதலாவது, இரண்டாவது, மற்றும் மூன்றாவது இடத்திற்கான தங்களின் தெரிவுகளை உள்ளிட்டிருக்க வேண்டும்.

b) வாக்குச்சீட்டில் கையொப்பமிட்டு அவர்களின் பெயர்களை எழுதியிருக்க வேண்டும்.

2. வாக்களிக்கும் நடுவர்கள் தங்களின் வாக்குச்சீட்டுகளைக் குறித்து முடித்ததும், அவர்கள் வாக்குச்சீட்டின் கீழ் பகுதியைக் கிழித்து, அதனை வழங்கப்பட்ட உறையில் வைக்க வைத்து, வாக்குச்சீட்டு கணக்காளர்கள் சேகரிப்பதற்காக உறையைத் தூக்கிப் பிடிக்க வேண்டும்.

   a) வாக்குச்சீட்டின் மேல்பகுதி வாக்குச்சீட்டு கணக்காளர்களுக்கு வழங்கப்படாது மற்றும் போட்டிக்குப் பின் வாக்களிக்கும் நடுவரால் இரகசியமாகக் கிழிக்கப்பட வேண்டும்.

3. தலைமை நடுவர் தனிப்பட்ட முறையில் சமநிலையில் சீர்தூக்கும் நடுவரின் வாக்குச்சீட்டைச் சேகரிக்கிறார். இந்த வாக்குச் சீட்டில் அனைத்துப் போட்டியாளர்களும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவரால் தரவரிசைப்படுத்தப்பட்டு இருப்பார்கள்.

   a) வாக்குச்சீட்டின் மேல்பகுதி தலைமை நடுவருக்கு வழங்கப்படாது மற்றும் போட்டிக்குப் பின் சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் இரகசியமாகக் கிழித்துவிடவேண்டும்.

◆ 4. வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் போட்டியின் முடிவில் தங்களின் வாக்குச்சீட்டுகளை முடித்ததும், நிறுத்துக் கடிகாரம் வைத்துள்ள நேரக் கணக்காளர் நேரப் பதிவுத் தாளை முடிக்கிறார், அதை வழங்கப்பட்ட உறையிலிட்டு, தலைமை நடுவரிடம் ஒப்படைக்கிறார்.

L. அனைத்து வாக்குச்சீட்டுகளும் சேகரிக்கப்பட்ட பின், வாக்குச்சீட்டு கணக்காளர்கள் மற்றும் தலைமை நடுவர் போட்டிப் பகுதியை விட்டு வெளியேறி கணக்கிடும் அறைக்குச் செல்வார்கள்.

1. கணக்கிடும் அறையில், வாக்குச்சீட்டு கணக்காளர்கள் போட்டியின் முடிவுகளை Counter’s Tally Sheet (உருப்படி 1176, ஆங்கிலத்தில் மட்டும்) ஐப் பயன்படுத்தி கணக்கிடுவார்கள்.

   a) Counter’s Tally Sheet இல் ஒவ்வொரு போட்டியாளரும் வாக்களிக்கும் நடுவரின் வாக்குச்சீட்டில் முதலாவது, இரண்டாவது, அல்லது மூன்றாவது இடம் என்பதற்கு ஏற்ப புள்ளிகளைப் பெறுவார்கள்.

      1. ஒவ்வொரு முதல் இடத்தரவரிசைக்கும் மூன்று (3) புள்ளிகள் மதிப்பெண்கள் பெறுவார்கள்.

      2. ஒவ்வொரு இரண்டாம் இடத்தரவரிசைக்கும் இரண்டு (2) புள்ளிகள் மதிப்பெண்கள் பெறுவார்கள்.

      3. ஒவ்வொரு மூன்றாம் இடத்தரவரிசைக்கும் ஒரு (1) புள்ளிகள் மதிப்பெண்கள் பெறுவார்கள்.

b) அனைத்துப் புள்ளிகளும் உள்ளிடப்பட்டதும், வாக்குச்சீட்டு கணக்காளர்கள் ஒவ்வொரு போட்டியாளருக்குமான மொத்தப் புள்ளிகளைக் கணக்கிட்டு மொத்தத்தை tally sheet இன் அடியில் உள்ளிடுவார்கள்.

1. முடிவுகள் தாளில் உள்ளிடப்படுவதற்கு முன் மொத்தப் புள்ளிகள் அனைத்து வாக்குச்சீட்டுக் கணக்காளர்களாலும் சரிபார்க்கப்பட வேண்டும்.
2. பின்னர் போட்டியாளர்கள் அவர்கள் பெற்ற புள்ளிகள் மதிப்பெண் அடிப்படையில் கணக்கீட்டுத் தாளின் அடிப்பகுதியில் தரவரிசைப்படுத்தப்படுவார்கள்.

c) சமநிலை ஏற்பட்டால், தலைமை நடுவர் சமநிலையில் சீர்தூக்கும் நடுவரின் வாக்குச்சீட்டை ஆலோசிப்பார்.

d) சமநிலையில் சீர்தூக்கும் நடுவரின் வாக்குச்சீட்டில் உயர்ந்த தரவரிசை பெற்ற சமநிலைப் போட்டியாளர் போட்டி இடத்தைப் பெறுவார், மற்றும் மற்ற சமநிலைப் போட்டியாளர்கள் அந்தப் போட்டியாளருக்கு அடுத்த தரவரிசையில் வரிசைப்படுத்தப்படுவார்கள்.

2. முடிவுகள் கணக்கிடப்பட்டு சரிபார்க்கப்பட்டதும், தலைமை நடுவர் அனைத்துப் போட்டியாளர்களின் தரவரிசையையும் Notification of Contest Winner form (உருப்படி 1182, ஆங்கிலத்தில் மட்டும்) இல் பதிவுசெய்வார், இது அடுத்த நிலைக்கான போட்டியின் அமர்வுத்தலைவரிடம் சமர்பிப்பார் அல்லது மாவட்ட நிலையில் பன்னாட்டுப் பேச்சுப் போட்டி எனில் உலகத் தலைமையகத்திடம் சமர்பிப்பார். தலைமை நடுவர் வெற்றியாளர்களின் பெயரை இறங்கு வரிசையில் Results Form (உருப்படி 1168, ஆங்கிலத்தில் மட்டும்) இல் பதிவுசெய்து போட்டியின் அமர்வுத்தலைவரிடம் வழங்குவார்.

a) வெற்றியாளர்கள் அறிவிக்கப்படும் வரையில் அனைத்து வாக்குச்சீட்டுகளும் கணக்கீட்டுத் தாளும் தலைமை நடுவரிடம் மட்டுமே இருக்கவேண்டும்.

b) வெற்றியாளர் அறிவிக்கப்பட்டதும், தலைமை நடுவர் அனைத்து வாக்குச்சீட்டுகள், நேரப்பதிவுகள் மற்றும் கணக்கீட்டுத் தாள் இவைகளை அழித்து விடுவார்.

M. போட்டியாளர் நேர்காணல்கள் முடிந்ததும், போட்டியின் அமர்வுத்தலைவர் போட்டியின் வெற்றியாளர்களை அறிவிப்பார்.

1. மூன்று (3) அல்லது அதற்கு மேற்பட்ட பங்கேற்பாளர்களுள்ள போட்டியில், ஒரு மூன்றாம் இட வெற்றியாளர், ஒரு இரண்டாம் இட வெற்றியாளர், மற்றும் ஒரு முதல் இட வெற்றியாளர்

அறிவிக்கப்படுவார்கள். வெற்றியாளர்கள் இறங்குவரிசையில் அறிவிக்கப்படுவார்கள்.

2. மூன்றுக்கு (3) குறைவான பங்கேற்பாளர்கள் உள்ள போட்டிகளில், ஒரு இரண்டாம் இட வெற்றியாளர் (பொருந்தினால்) மற்றும் ஒரு முதல் இட வெற்றியாளர் அறிவிக்கப்படுவார். வெற்றியாளர்கள் இறங்குவரிசையில் அறிவிக்கப்படுவார்கள்.
3. வெற்றியாளர்களை நிகழ்வு முடிவதற்கு முன் அறிவிக்கப்பட வேண்டும்.
    a) இந்தப் போட்டி மட்டுமே நடைபெறும் ஒரே நிகழ்வாக இருந்தால், வெற்றியாளர்களைப் போட்டி ஒத்திவைக்கப்படுவதற்கு முன் அறிவிக்கப்பட வேண்டும்.
    b) ஒரு பெரிய மாநாடு அல்லது நிகழ்வின் ஒரு பகுதியாக பல போட்டிகள் நடைபெற்றால் அனைத்துப் போட்டிகளின் வெற்றியாளர்களைமாநாடு அல்லது நிகழ்வு முடியும் முன்னர் அறிவிக்கப்பட்ட வேண்டும்.
4. ஒரு நிகழ்வில் பல போட்டிகள் நடைபெற்றால், ஒவ்வொரு போட்டியும் அடுத்த போட்டித் தொடங்கும் முன் வெற்றியாளர்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றாலும் கூட அதிகாரப்பூர்வமாக ஒத்திவைக்கப்பட வேண்டும்
5. பன்னாட்டுப் பேச்சுப் போட்டியின் மண்டல காலிறுதிகளுக்கு, அரையிறுதிகளுக்கு முன்னேறும் போட்டியாளர்கள் எந்த குறிப்பிட்ட வரிசையிலும் அறிவிக்கப்படமாட்டார்கள். இடவரிசை அறிவிக்கப்படமாட்டாது.
6. பன்னாட்டுப் பேச்சுப் போட்டியின் அரையிறுதிகளுக்கு, World Championship of Public Speaking க்கு முன்னேறும் போட்டியாளர் எந்த குறிப்பிட்ட வரிசையிலும் அறிவிக்கப்படமாட்டார்கள். இடவரிசை அறிவிக்கப்படமாட்டாது.
7. வெற்றியாளர்களின் பட்டியல் தவறாக அறிவிக்கப்படாமல் இருக்கும் வரையில், போட்டி வெற்றியாளர்களின் அறிவிப்பே இறுதியானதாகும். ஒருவேளை வெற்றியாளர்களின் பட்டியல் தவறாக அறிவிக்கப்பட்டால், அப்பொழுது தலைமை நடுவர், வாக்குச்சீட்டு கணக்காளர்கள், அல்லது நேரக் கணக்காணளர்கள் பிழையைச் சரிசெய்ய உடனடியாக குறுக்கிட அனுமதிக்கப்படுகிறார்கள்.

## 6. பேச்சுக்களின் காலநேரம்

A. இரண்டு (2) நேரக் கணக்காளர்கள் தலைமை நடுவரால் நியமிக்கப்படுகிறார்கள். ஒருவருக்கு நிறுத்துக்கடிகாரமும், மற்றொருவருக்கு பச்சை, மஞ்சள், மற்றும் சிவப்பு நிறங்களைக் காட்டும் சமிக்ஞைக் கருவியும் வழங்கப்படும்.

B. சமிக்ஞைக் கருவி ஒவ்வொரு போட்டியாளரும் முழுதாகப் பார்க்கும்படி இருக்கவேண்டும்.

C. நிறுத்துக்கடிகாரத்தைக் கொண்ட நேரக் கணக்காளர் ஒவ்வொரு பேச்சிற்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட நேரத்தின் எழுத்துப்பூர்வப் பதிவை Speech Contest Time Record Sheet and Instructions for Timers (உருப்படி 1175, ஆங்கிலத்தில் மட்டும்) இல் தலைமை நடுவருக்கு வழங்குகிறார். இது அதிகாரப்பூர்வ நேரத்தைக் குறிக்கிறது.

D. காலநேரக் கருவியைக் கையாளும் நேரக் கணக்காளர் பேச்சின் பொருத்தமான நேரங்களில் போட்டியாளர்கள் துல்லியமான பச்சை, மஞ்சள் அல்லது சிவப்பு சமிக்ஞைகளை பார்க்க முடிவதை உறுதிப்படுத்துகிறார்.

E. போட்டியாளர்களால் வழங்கப்படும் அனைத்துப் பேச்சுகளும் போட்டிக்கான காலநேர வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.

1. பன்னாட்டு மற்றும் நகைச்சுவைப் போட்டிப் பேச்சுகள் ஐந்திலிருந்து (5) ஏழு (7) நிமிடங்கள் வரை இருக்க வேண்டும். பேச்சு நான்கு (4) நிமிடங்கள் 30 வினாடிகளுக்குக் குறைவாக இருந்தால் அல்லது ஏழு (7) நிமிடங்கள் 30 வினாடிகளுக்கு அதிகமாக இருந்தால் போட்டியாளர் தகுதிநீக்கம் செய்யப்படுவார். நேரக்கணக்காளர் ஒரு நொடியின் கூறுகளைக் கருத்தில் கொள்ளக்கூடாது. ஒரு போட்டியாளர் அவரின் காலநேரம் நான்கு (4) நிமிடங்கள் மற்றும் 30 வினாடிகளை அடையும் வரை தகுதி பெறமாட்டார் மற்றும் அவரின் காலநேரம் ஏழு (7) நிமிடங்கள் மற்றும் 31 வினாடிகளை அடையும் வரை தகுதி நீக்கம் செய்யப்பட மாட்டார்.

2. உடனடிப் பேச்சுப் போட்டிப் பேச்சுகள் ஒன்றிலிருந்து (1) இரண்டு (2) நிமிடங்களுக்குள் இருக்க வேண்டும். பேச்சு ஒரு (1) நிமிடத்திற்கு குறைவாக இருந்தால் அல்லது இரண்டு (2) நிமிடங்கள் 30 வினாடிகளுக்கு அதிகமாக இருந்தால் போட்டியாளர் தகுதிநீக்கம் செய்யப்படுவார். நேரக்கணக்காளர் ஒரு நொடியின் கூறுகளைக் கருத்தில் கொள்ளக்கூடாது. ஒரு போட்டியாளரின் காலநேரம் ஒரு (1) நிமிடத்தை அடையும் வரை தகுதி பெறமாட்டார் மற்றும் அவரின் காலநேரம் இரண்டு (2) நிமிடங்கள் மற்றும் 31 வினாடிகளை அடையும் வரை வரை தகுதி நீக்கம் செய்யப்பட மாட்டார்.

3. மதிப்பீட்டுப் போட்டிப் பேச்சுகள் இரண்டிலிருந்து (2) மூன்று (3) நிமிடங்களுக்குள் இருக்க வேண்டும். பேச்சு ஒரு (1) நிமிடம் 30 வினாடிக்குக் குறைவாக இருந்தால் அல்லது மூன்று (3) நிமிடங்கள் 30 வினாடிகளுக்கு அதிகமாக இருந்தால் போட்டியாளர் தகுதிநீக்கம் செய்யப்படுவார். நேரக்கணக்காளர் ஒரு நொடியின் கூறுகளைக் கருத்தில் கொள்ளக்கூடாது. ஒரு போட்டியாளர் அவரின் காலநேரம்

ஒரு (1) நிமிடம் மற்றும் 30 வினாடிகளை அடையும் வரை தகுதி பெறமாட்டார் மற்றும் அவரின் காலநேரம் மூன்று(3) நிமிடங்கள் மற்றும் 31 வினாடிகளை அடையும் வரை தகுதி நீக்கம் செய்யப்பட மாட்டார்.

◆ 4. மிகைபடக் கூறும் கதைகள் போட்டிப் பேச்சுகள் மூன்றிலிருந்து (3) ஐந்து (5) நிமிடங்களுக்குள் இருக்க வேண்டும். பேச்சு இரண்டு (2) நிமிடம் 30 வினாடிக்குக் குறைவாக இருந்தால் அல்லது ஐந்து (5) நிமிடங்கள் 30 வினாடிகளுக்கு அதிகமாக இருந்தால் போட்டியாளர் தகுதிநீக்கம் செய்யப்படுவார். நேரக்கணக்காளர் ஒரு நொடியின் கூறுகளைக் கருத்தில் கொள்ளக்கூடாது. ஒரு போட்டியாளரின் காலநேரம் இரண்டு (2) நிமிடங்களை அடையும் வரை தகுதி பெறமாட்டார் மற்றும் ஐந்து (5) நிமிடங்கள் மற்றும் 31 வினாடிகளை அடையும் வரை வரை தகுதி நீக்கம் செய்யப்பட மாட்டார்.

F. அறிமுகப்படுத்தப்பட்டவுடன், போட்டியாளர் பேசும் இடத்திற்கு உடனடியாகச் செல்ல வேண்டும்.

1. காலநேரம் அவையோர்களை நோக்கிய போட்டியாளரின் முதல் உறுதியான பேச்சு அல்லது பேச்சு அல்லாத தொடர்பாடலில் தொடங்கும். இது பொதுவாக போட்டியாளரால் கூறப்படும் முதல் சொல்லாக இருக்கும், ஆனாலும் ஒலியெழுப்புதல், மற்றொரு நபரினால் ஒரு மேடை நடிப்பு போன்ற ஏனைய தொடர்பாடல்களும் இதில் அடங்கும்.
2. பேச்சாளர் பேசும் பகுதிக்கு வந்த பின் மிகக் குறுகிய நேரத்திற்குள் பேச்சைத் தொடங்க வேண்டும், போட்டியைத் தேவையன்றி தாமதம் செய்வது அனுமதிக்கப்படாது.

G. நேரக் கணக்காளர்கள் போட்டியாளர்களுக்கு எச்சரிக்கை சமிக்ஞைகளை வழங்க வேண்டும், அவை பேச்சாளர்களுக்குத் தெளிவாகத் தெரிய வேண்டும் ஆனால் அவையோர்களுக்கு தெளிவாகத் தெரியவேண்டியதில்லை.

1. பன்னாட்டு மற்றும் நகைச்சுவைப் போட்டிகளுக்கு:
   a) பச்சை சமிக்ஞை ஐந்து (5) நிமிடங்களில் காட்டப்படும் மற்றும் இது ஒரு (1) நிமிடம் - தொடர்ந்து காட்டப்படும்.
   b) மஞ்சள் சமிக்ஞை ஆறு (6) நிமிடங்களில் காட்டப்படும் மற்றும் இது ஒரு (1) நிமிடம் - தொடர்ந்து காட்டப்படும்.
   c) சிவப்பு சமிக்ஞை ஏழு (7) நிமிடங்களில் காட்டப்படும் மற்றும் இது பேச்சு முடிவடையும் வரையில் தொடர்ந்து காட்டப்படும்.
2. மதிப்பீட்டுப் போட்டிகளுக்கு:
   a) பச்சை சமிக்ஞை இரண்டு (2) நிமிடங்களில் காட்டப்படும் மற்றும் இது முப்பது (30) வினாடிகள் தொடர்ந்து காட்டப்படும்.

b) மஞ்சள் சமிக்ஞை இரண்டு (2) நிமிடங்கள் 30 வினாடிகளில் காட்டப்படும் மற்றும் இது முப்பது (30) வினாடிகள் தொடர்ந்து காட்டப்படும்.

c) சிவப்பு சமிக்ஞை மூன்று (3) நிமிடங்களில் காட்டப்படும் மற்றும் இது மதிப்பீடு முடிவடையும் வரையில் தொடர்ந்து காட்டப்படும்.

3. உடனடிப் பேச்சுப் போட்டிப் போட்டியாளர்களுக்கு:

a) பச்சை சமிக்ஞை ஒரு (1) நிமிடத்தில் காட்டப்படும் மற்றும் இது முப்பது (30) வினாடிகள் - தொடர்ந்து காட்டப்படும்.

b) மஞ்சள் சமிக்ஞை ஒரு (1) நிமிடம் 30 வினாடிகளில் காட்டப்படும் மற்றும் இது முப்பது (30) வினாடிகள் தொடர்ந்து காட்டப்படும்.

c) சிவப்பு சமிக்ஞை இரண்டு (2) நிமிடங்களில் காட்டப்படும் மற்றும் இது பேச்சு முடிவடையும் வரையில் தொடர்ந்து காட்டப்படும்.

4. மிகைபடக்கூறும் கதைகள் போட்டிகளுக்கு:

a) பச்சை சமிக்ஞை மூன்று (3) நிமிடங்களில் காட்டப்படும் மற்றும் இது ஒரு (1) நிமிடம் தொடர்ந்து காட்டப்படும்.

b) மஞ்சள் சமிக்ஞை நான்கு (4) நிமிடங்களில் காட்டப்படும் மற்றும் இது ஒரு (1) நிமிடம் தொடர்ந்து காட்டப்படும்.

c) சிவப்பு சமிக்ஞை ஐந்து (5) நிமிடங்களில் காட்டப்படும் மற்றும் இது பேச்சு முடிவடையும் வரையில் தொடர்ந்து காட்டப்படும்.

5. அனைத்துப் பேச்சுப் போட்டிகளிலும், கூடுதல் நேரக் காலத்திற்கு எந்த சமிக்ஞையும் வழங்கப்படாது.

6. விழித்திறன் குறையுள்ள போட்டியாளர் அவருடைய சொந்தத் தேர்விற்கு ஏற்ப ஒரு எச்சரிக்கை சமிக்ஞை வடிவத்தைக் கோர அனுமதிக்கப்படுகிறார் மற்றும் இது கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும்.

a) ஏற்றுக்கொள்ளத்தக்க எச்சரிக்கை சமிக்ஞைகளில் இவையும் அடங்கும், ஆனால் வரையறுக்கப்படவில்லை: ஐந்து (5), ஆறு (6), மற்றும் ஏழு (7) நிமிடங்களில் நேரத்தை அறிவிக்கும் ஒரு ஒலிப்பான், ஒரு மணி, அல்லது ஒரு நபர்.

b) ஒரு சமிக்ஞைக்கு ஏதேனும் தனிச்சிறப்புடையக் கருவி மற்றும்/அல்லது குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் தேவைப்பட்டால், போட்டியாளர் அதனை வழங்க வேண்டும்.

7. சமிக்ஞை அல்லது நேரக் கருவியில் தொழில்நுட்பக் குறைபாடு ஏற்பட்டால், பேச்சாளர் தகுதிநீக்கம் செய்யப்படுவதற்கு முன்பாக கூடுதலாக 30 வினாடிகள் பேச அனுமதிக்கப்படுவார்.

◆ H. முடிவுகளை அறிவிக்கும் முன்பாக, போட்டியின் அமர்வுத்தலைவர் காலநேரத் தகுதியிழப்பு நேர்ந்துள்ளதா என்பதை அறிவிக்க

வேண்டும், ஆனால் அதில் ஈடுபட்ட போட்டியாளர்(களின்) பெயரை அறிவிக்கக்கூடாது.

## 7. எதிர்ப்புகள் மற்றும் தகுதியிழப்புகள்

A. எதிர்ப்புகள் மற்றொரு போட்டியாளரின் பேச்சின் தகுதி, சுயமான படைப்பு மற்றும் குறிப்புகளுக்கு வரம்பிடப்பட்டுள்ளன மற்றும் இவை வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும்/அல்லது போட்டியாளர்களால் மட்டுமே பதிவுசெய்யப்பட வேண்டும். எந்த ஒரு எதிர்ப்பும் போட்டி ஒத்திவைக்கப்படும் முன்னர் தலைமை நடுவர் மற்றும் அல்லது போட்டியின் அமர்வுத் தலைவரிடம் பதிவுசெய்யப்பட வேண்டும்.

B. தலைமை நடுவர், போட்டியின் அமர்வுத்தலைவர்,வாக்களிக்கும் ந டுவர்கள், மற்றும் போட்டியாளர்கள் ஆகியோர் அவையோர்களிடமிருந்து வரும் எதிர்ப்புகளைக் கருதக்கூடாது.

C. ஒரு போட்டியாளர் சுயமான படைப்பு, அல்லது மற்றொரு போட்டியாளரின் பேச்சைக் குறிப்பிட்டதற்காகத் தகுதியிழப்பு செய்யப்படுவதற்கு முன்பாக, வாக்களிக்கும் நடுவரிடம் பதிலளிப்பதற்கான ஒரு வாய்ப்பு அந்தப் போட்டியாளருக்கு வழங்கப்பட வேண்டும். தகுதியிழப்பு முடிவில் வாக்களிக்கும் நடுவர்களில் பெரும்பான்மை ஒப்புக் கொள்ள வேண்டும்.

D. போட்டியின் அமர்வுத்தலைவர் தகுதியின் அடிப்படையில் போட்டியாளரைத் தகுதியிழப்புச் செய்யலாம்.

E. வாக்களிக்கும் நடுவர்கள், மற்றும் தகுதிகாண் நடுவர்களின் அனைத்து முடிவுகளும் இறுதியானதாகும்.

## 8. அரங்கத் துணைப்பொருட்கள் மற்றும் மின்னணு கருவிகளின் பயன்பாடு

A. அரங்கத் துணைப்பொருட்களைப் (எந்த வகையான மின்னணுக் கருவிகள் உட்பட) பயன்படுத்த விரும்பும் போட்டியாளர்கள் போட்டிக்கு முன்பாக போட்டியின் அமர்வுத்தலைவரிடம் தெரிவிக்க வேண்டும்.

B. போட்டியாளர்கள் அரங்கத்துணைப் பொருட்களைப் பயன்படுத்துவதில் இடக் கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

C. எல்லா அரங்கத் துணைப்பொருட்களும் போட்டியாளரின் பேச்சுக்கு முந்தைய ஒரு நிமிட அமைதியில் அமைக்கப்பட வேண்டும் மற்றும் பேச்சைத் தொடர்ந்த ஒரு நிமிட அமைதியில் அகற்றப்பட வேண்டும்.

1. போட்டியாளர்கள் அரங்கத்துணைப்பொருட்களுடன் அவர்களுக்கு உதவுவதற்காக ஒருவரைச் சேர்த்துக் கொள்ளலாம், ஆனால் அவ்வாறு செய்வது போட்டியின் அமர்வுத்தலைவர் அல்லது ஏனைய போட்டி அதிகாரிகளின் பொறுப்பல்ல.

2. போட்டியாளர் அரங்கத் துணைப்பொருட்களை ஒதுக்கப்பட்ட நேரத்தில் அமைக்க மற்றும் அகற்ற முடியும் என்பதை போட்டிக்கு முன்பாக போட்டியின் அமர்வுத்தலைவரிடம் செய்து காண்பிக்க வேண்டும்.
   a) ஒரு போட்டியாளரால் இதைச் செய்து காட்ட இயலவில்லை எனில், போட்டியின் போது அரங்கத் துணைப்பொருட்களைப் பயன்படுத்த முடியாது.

## பன்னாட்டுப் பேச்சுப் போட்டி விதிகள்

பன்னாட்டுப் பேச்சுப் போட்டி ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்பட வேண்டும், அது இந்த விதிப் புத்தக்கத்தில் பொது விதிகளில் திட்ட வரையப்பட்ட அனைத்து விதிகளையும் பின்பற்றுகிறது. மேலதிகமாக, பின்வரும் கூடுதல்கள் மற்றும் விதிவிலக்குகள் பொருந்தும்.

1. பன்னாட்டுப் பேச்சுப் போட்டிகள் மன்ற நிலையில் தொடங்கி பகுதி, கோட்டம், மாவட்டம், மண்டல காலிறுதி, அரையிறுதி, மற்றும் இறுதி நிலை எனத் தொடர்கிறது.
   A. மாவட்ட - நிலை போட்டிக் காணொளிகள் உலகத் தலைமையகத்திற்குச் சமர்பிக்கப்படுகிறது, அவை மண்டல காலிறுதி மதிப்பிடுதலில் பயன்படுத்தப்படும், அவை இந்த தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்:

      ஒலி

      - ஒலி எந்தவித எதிரொலிப்பு, தடங்கல் அல்லது கூடுதல் இரைச்சல் இல்லாமல் தெளிவாக இருக்க வேண்டும்.

      படக்கருவி

      - படக்கருவி உயர் தெளிவுத்திறனில் பதிவு செய்ய வேண்டும்.
      - ஒற்றை படக்கருவி அமைப்பு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது; பல படக்கருவிக் கோணங்களைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்படவில்லை.
      - படக்கருவி ஒரு முக்காலியில் வைக்கப்பட்டு நிலைத்தன்மையைப் பராமரிக்க வேண்டும் மற்றும் தேவையற்ற நகர்வுகளைத் தவிர்க்க வேண்டும்.
      - படக்கருவி போட்டியாளர்களின் தடையற்ற, குவிக்கப்பட்ட பார்வையைக் கொண்டிருக்க வேண்டும்.
      - ஒட்டுமொத்த பேசும் பகுதியும் பதிவு முழுமைக்கும் தெரிய வேண்டும்.

- படக்கருவி முறையாகப் பதிவுசெய்கிறது என்பது ஒரு படக்கருவி இயக்குபவரால் அனைத்து நேரங்களிலும் கண்காணிக்கப்பட வேண்டும்.
- உருப்பெருக்கம் அனுமதிக்கப்படவில்லை.

ஒளியமைப்பு

- பேசும் பகுதி முழுமையாக ஒளியூட்டப்பட்டிருக்க வேண்டும்.
- பேச்சாளரின் முக பாவங்கள் பேச்சு முழுமைக்கும் தெரிய வேண்டும்; படம் அதிக வெளிச்சமாக அல்லது அதிக இருட்டாக இருக்கக் கூடாது.
- படக்கருவியை நோக்கி இயற்கையான அல்லது செயற்கையான எந்த ஒளியமைப்பும் இருக்கக் கூடாது.

காணொளிப் பதிவு

- இப் பதிவு போட்டியின் அமர்வுத்தலைவரால் வெற்றிபெற்ற போட்டியாளரின் பேச்சின் அறிமுகம் மற்றும் ஒட்டுமொத்த வெற்றிப் பேச்சினைக் கொண்டிருக்க வேண்டும்.
- இப்பதிவானது உரை, வரைகலை, படங்கள் அல்லது மேற்கண்ட தேவைகளை நிறைவுசெய்யாத ஏனையவற்றைச் சேர்ப்பது போன்ற எந்த வழியிலும் திருத்தப்பட்டிருக்கக்கூடாது.

◆ B. மண்டல காலிறுதி காணொளிப் பதிவுத் தேவைகள் எதையும் பூர்த்தி செய்யத் தவறினால், போட்டியாளர் தலைமை நடுவரால் தகுதி நீக்கம் செய்யப்படுவார். சமர்ப்பிக்கும் மாவட்டத்திற்குத் தகுதிநீக்கம் பற்றி தெரிவிக்கப்படும்.

C. உலகத் தலைமையகத்திற்கு மாவட்டச் சமர்ப்பிப்பு

1. மாவட்ட நிலை பன்னாட்டுப் பேச்சுப் போட்டியைத் தொடர்ந்து, தலைமை நடுவர் Notification of Contest Winner form (உருப்படி 1182, ஆங்கிலத்தில் மட்டும்) இல் உள்ள முடிவுகளின் வரிசையில் மாவட்ட நிலை போட்டியாளர்களைத் தரவரிசைப்படுத்துகிறார், அதன்பின் படிவத்தை திட்டத் தர இயக்குனருக்குச் சமர்பிக்கிறார்.
2. திட்டத் தர இயக்குனர், Notification of Contest Winner form, மண்டல காலிறுதி காணொளி வெளியீட்டுப் படிவம், மற்றும் முதல்-இட வெற்றியாளர் காணொளியைக் கோரப்பட்ட வடிவம் மற்றும் முறையில் உலகத் தலைமையகத்திற்குச் சமர்பிக்கிறார்.

D. மாவட்ட வெற்றியாளர்களைச் சமர்பித்த பின் மண்டல காலிறுதிகள் காணொளி மூலம் நடத்தப்படுகின்றன.

1. மண்டலக் காலிறுதி நடுவர்கள் தலைமை நடுவரால் வழங்கப்பட்ட வரிசையில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மண்டலத்தின் அனைத்துக் காணொளிகளையும் பார்க்கின்றனர்.

2. மண்டலக் காலிறுதி நடுவர்கள் அனைத்து காணொளிகளையும் ஒரே (1) அமர்வில் பார்க்க வேண்டும்.
3. மண்டலக் காலிறுதி நடுவர்கள் ஒவ்வொரு காணொளியையும் ஒருமுறை மட்டுமே பார்க்கலாம். இடைநிறுத்துவது அல்லது பின்செல்வது தடைசெய்யப்படுகிறது.
4. மண்டலக் காலிறுதி முடிவுகள் அறிவிக்கப்பட்டதும், அரையிறுதிப் போட்டி பற்றிய தகவலானது உலகத் தலைமையகத்தால் போட்டியாளர்களுக்கு வழங்கப்படும்.

E. அரையிறுதிகள் பன்னாட்டு மாநாட்டில் நடத்தப்படும், மற்றும் அதில் ஒவ்வொரு மண்டல காலிறுதிப் போட்டியின் முதல் இரண்டு (2) வெற்றியாளர்கள், சமவாய்ப்பு முறையில் நான்கு (4) தனித்தனி போட்டிகளுக்கு ஒதுக்கப்படுவார்கள்.
1. அரையிறுதிப் பேச்சுப் போட்டிகளுக்கான விளக்கம் அனைத்துப் போட்டியாளர்களுக்கும் உலகத் தலைமையக ஊழியரால் ஒரே நேரத்தில் நடத்தப்படும்.
2. அரையிறுதிப் பேச்சுப் போட்டிகளுக்கான அனைத்து நடுவர்கள் விளக்கமும் உலகத் தலைமையக ஊழியரால் ஒரே நேரத்தில் நடத்தப்படும்.

F. World Championship of Public Speaking இல் பங்குபெறும் ஒவ்வொரு போட்டியாளரும் ஒட்டுமொத்தமாக புதிய மற்றும் அந்த ஆண்டு அரையிறுதிப் பேச்சுப் போட்டிக்கு அவர்கள் வழங்கிய பேச்சிலிருந்து அல்லது ஏனைய முந்தைய ஆண்டுகளின் அரையிறுதி மற்றும் இறுதிச் சுற்று பேச்சுப் போட்டிகளிலிருந்து வித்தியாசமான பேச்சினை வழங்க வேண்டும்.
1. பன்னாட்டு மாநாட்டில் அரையிறுதி நிலைக்கு முன்னேறும் வெற்றியாளர்கள், அவர்களின் அரையிறுதி பேச்சின் திட்டவரையை ஆயத்தம் செய்து உலகத் தலைமையகத்தில் வழங்க வேண்டும். அவர்கள் முன்னர் அரையிறுதி அல்லது இறுதிநிலையில் போட்டியிட்டிருந்தால், போட்டியாளர் இந்த நிலைகளில் முன்பு வழங்கிய அனைத்து பேச்சுகளின் திட்டவரையையும் உலகத்தலைமையகத்தில் வழங்க வேண்டும். அனைத்து அரையிறுதி வெற்றியாளர்களின் திட்டவரையும் World Championship of Public Speaking க்கான நடுவர்கள் விளக்கத்தின்போது அல்லது அதற்கு முன்பாக தகுதிகாண் நடுவர்களிடம் வழங்கப்படும்.
2. தகுதிகாண் நடுவர்களுக்கு ஒரு தகுதித்தாளும் வழங்கப்படும். இந்தத் தாளில், தகுதிகாண் நடுவர்கள் World Championship of Public Speaking இல் வழங்கப்படும் பேச்சு ஒட்டுமொத்தமாக புதியதா மற்றும் அந்த ஆண்டு அரையிறுதிப் போட்டிக்கு வழங்கிய பேச்சிலிருந்து அல்லது

ஏனைய முந்தைய ஆண்டுகளின் அரையிறுதி மற்றும் இறுதிச் சுற்று போட்டிகளிலிருந்து வித்தியாசமான பேச்சா என்பதைக் குறிப்பார்கள்.

3. போட்டியின் முடிவில் வாக்களிக்கும் நடுவர்கள் தங்களின் வாக்குச்சீட்டுகளை முடிக்கும்போது, தகுதிகாண் நடுவர்கள் தகுதித்தாளை முடித்து, கையொப்பமிட்டு, வழங்கப்பட்ட உறையில் வைத்து, வாக்குச்சீட்டு கணக்காளர்கள் சேகரிப்பதற்காகத் உயர்த்திப் பிடிப்பார்கள்.
4. வாக்குச்சீட்டு கணக்கிடும் அறையில், தலைமை நடுவர் அனைத்துப் பேச்சாளர்களின் தகுதிகாண் தாள்களையும் திறந்து சீராய்வு செய்வார். ஒரு கொடுக்கப்பட்ட பேச்சாளரக்கு ஐந்தில் (5) மூன்று (3) தகுதிகாண் நடுவர்கள் தகுதியிழப்புக் கட்டத்தில் செக் (X) செய்திருந்தால், அந்தப் பேச்சாளர் தகுதியிழப்பு செய்யப்படுவார், மற்றும் எந்த எதிர்ப்பும் மேற்கொள்ளப்படாது.

2. அரையிறுதி மற்றும் World Championship of Public Speaking ஆகியன போட்டி சுழற்சித் தொடங்குவதற்கு முந்தைய ஜூலை 1 இல் இருந்த, அதாவது World Championship of Public Speaking தொடங்குவதற்கு கிட்டதட்ட 14 மாதங்களுக்கு முந்தைய விதிப் புத்தகத்தின் பதிப்பைப் பின்பற்றும்.

## மதிப்பீட்டுப் போட்டி விதிகள்

மதிப்பீட்டுப் போட்டிகள் இந்த விதிப் புத்தகத்தின் பொது விதிகள் பிரிவில் திட்ட வரையப்பட்ட அனைத்து விதிகளையும் பின்பற்றுகிறது. மேலதிகமாக, பின்வரும் கூடுதல்கள் மற்றும் விதிவிலக்குகள் பொருந்தும்.

1. இந்தப் போட்டியின் தொடக்கத்தில், ஒரு ஐந்து (5) - ஏழு (7) நிமிடங்கள் வரையிலான இலக்குப் பேச்சு வழங்கப்படும்.
   A. இந்த இலக்குப் பேச்சு ஒரு போட்டி-வகைப் பேச்சாக இருக்க வேண்டும் அல்லது Toastmasters Pathways கற்றல் அனுபவத்திலிருந்து ஒரு திட்டப் பேச்சாக இருக்க வேண்டும்.
   B. இலக்குப் பேச்சின் போது ஆயத்தக் குறிப்புகளை மேற்கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் Evaluation Contestant Notes sheet (உருப்படி 1177, ஆங்கிலத்தில் மட்டும்) பயன்படுத்த வேண்டும். ஒன்றுக்கும் (1) மேற்பட்ட தாள்களைப் பயன்படுத்தலாம்.
   C. போட்டியின் எல்லா நிலையிலும் இலக்குப் பேச்சினை வழங்கும் சொல்வேந்தர் ஏனைய போட்டியாளர்களைப் போல் அதே மன்றத்தைச் சேர்ந்தவராக இருக்கக்கூடாது என்பது பரிந்துரைக்கப்படுகிறது.

D. இலக்குப் பேச்சாளர், பேச்சாளரின் பெயர், பேச்சுத் தலைப்பு, பேச்சுத் தலைப்பு, மற்றும் பேச்சாளரின் பெயர் ஆகியவற்றின் மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

E. இலக்குப் பேச்சாளரின் திட்டம் அல்லது பேச்சாளர் கொண்டுள்ள நோக்கங்கள், போட்டியாளர்கள், தலைமை நடுவர், வாக்களிக்கும் நடுவர்கள், சமநிலையில் சீர்தூக்கும் நடுவர், அல்லது அவையோர்களுக்கு அறியச் செய்யப்படக் கூடாது.

2. இலக்குப் பேச்சு முடிவடைந்தவுடன், அனைத்துப் போட்டியாளர்களும் அறையை விட்டு வெளியேற வேண்டும். அதன் பின் அவர்கள் Evaluation Contestant Notes sheet. ஐப் பயன்படுத்தி தங்களின் மதிப்பீட்டைச் தயார்செய்ய ஐந்து (5) நிமிடங்கள் கொடுக்கப்படும்.

   A. காலநேரம் மற்றும் தயாரிப்பு மேற்பார்வையானது போட்டியின் அவைக் காவலரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்.

   B. போட்டியாளர்கள் அறையை விட்டு வெளியேறுவது சாத்தியப்படாத இடங்களில் போட்டியாளர்கள் தங்களின் ஐந்து (5)-நிமிடத் தயாரிப்பை அதே அறையில் போட்டி அவைக் காவலரின் கட்டுப்பாட்டின் கீழ் முடிப்பார்கள்.

   C. போட்டியாளர்கள் போட்டியின் போது நேர்மையற்ற முன்நலனைப் பெறுவதற்காக மின்னிலக்க அல்லது ஏனைய கருவிகளைப் பயன்படுத்தக் கூடாது.

3. ஐந்து (5) நிமிடங்கள் முடிந்ததும், எவ்வித கூடுதல் தயாரிப்பும் அனுமதிக்கப்படாது மற்றும் அனைத்து போட்டியாளர்களும் தங்களின் Evaluation Contestant Notes sheet ஐ போட்டி அவைக் காவலரிடம் ஒப்படைக்க வேண்டும். போட்டியாளர்கள் தங்களின் மதிப்பீட்டை வழங்க அறிமுகப்படுத்தப்படும் போது The Evaluation Contestant Notes sheets அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்படும்.

4. ஒவ்வொரு போட்டியாளரையும் போட்டியாளரின் பெயரை இருமுறை அறிவித்து அறிமுகப்படுத்துங்கள். இது வழக்கமான "பெயர், பேச்சுத் தலைப்பு, பேச்சுத் தலைப்பு, பெயர்" வடிவத்திலிருந்து மாறுபடுகிறது ஏனெனில் மதிப்பீட்டு பேச்சுகள் தலைப்புகளைக் கொண்டிருப்பதில்லை என்பதைக் கவனியுங்கள்.

## நகைச்சுவைப் பேச்சுப் போட்டி விதிகள்

நகைச்சுவைப் பேச்சுப் போட்டிகள் இந்த விதிப் புத்தகத்தின் பொது விதிகள் பிரிவில் திட்ட வரையப்பட்ட அனைத்து விதிகளையும் பின்பற்றுகிறது. மேலதிகமாக, பின்வரும் கூடுதல்கள் மற்றும் விதிவிலக்குகள் பொருந்தும்.

1. நகைச்சுவை போட்டிக்கான பேச்சுக்களின் பொருள் போட்டியாளரால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பேச்சாளர் ஆட்சேபனைக்குரிய மொழி, நிகழ்வுகள், மற்றும் பொருளைத் தவிர்க்க வேண்டும்.
2. பேச்சு இயல்பில் கருப்பொருள் கொண்டதாக (தொடக்கம், முக்கியப் பகுதி மற்றும் நிறைவு) இருக்க வேண்டும், ஒரு தன்னுரையாக (ஒற்றை வரிகளின் தொடராக) இருக்கக் கூடாது.

## உடனடிப் பேச்சுத் தலைப்புகள் போட்டி விதிகள்

உடனடிப் பேச்சுப் போட்டிகள் இந்த விதிப் புத்தகத்தின் பொது விதிகள் பிரிவில் திட்ட வரையப்பட்ட அனைத்து விதிகளையும் பின்பற்றுகிறது. மேலதிகமாக, பின்வரும் கூடுதல்கள் மற்றும் விதிவிலக்குகள் பொருந்தும்.

1. அனைத்துப் போட்டியாளர்களும் ஒரே தலைப்பைப் பெற வேண்டும், இது இயல்பில் பொதுவானதாக இருக்க வேண்டும்.
   A. இத்தலைப்பு போட்டியின் அமர்வுத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
2. இத்தலைப்பு குறிப்பிடத்தக்க அளவு நீளத்தில் இருக்க வேண்டும், ஒரு விரிவான அறிவு தேவைப்படக்கூடாது, மற்றும் ஒரு கருத்து அல்லது முடிவுரை நோக்கிச் செல்ல வேண்டும்.
3. போட்டியாளர்கள் போட்டியின் அமர்வுத்தலைவரால் அறிமுகப்படுத்தப்படும் வரையில் தலைப்புகள் குறித்து எந்த முன் அறிதலும் பெற மாட்டார்.
4. போட்டியாளர்கள் போட்டியின் போது நேர்மையற்ற முன்நலனைப் பெறுவதற்காக மின்னிலக்க அல்லது ஏனைய கருவிகளைப் பயன்படுத்தக் கூடாது.
5. போட்டி தொடங்கும்போது முதலாவது போட்டியாளரைத் தவிர்த்து அனைத்துப் போட்டியாளர்களும் அறையை விட்டு வெளியேறி போட்டி அவைக் காவலரின் கண்காணிப்பின் கீழ் இருக்க வேண்டும்.
6. ஒவ்வொரு போட்டியாளரையும் போட்டியாளரின் பெயர், தலைப்பு, தலைப்பு, போட்டியாளரின் பெயர் என அறிவித்து அறிமுகப்படுத்துங்கள்.
7. ஒவ்வொரு பேச்சின் முடிவுரைக்குப் பின்னும், அடுத்த பேச்சாளர் அறைக்குள் அழைக்கப்படுவார்.

## மிகைபடக்கூறும் கதைகள் போட்டி விதிகள்

மிகைபடக் கூறும் கதைகள் போட்டி இந்த விதிப் புத்தகத்தின் பொது விதிகள் பிரிவில் திட்ட வரையப்பட்ட அனைத்து விதிகளையும் பின்பற்றுகிறது. மேலதிகமாக, பின்வரும் கூடுதல்கள் மற்றும் விதிவிலக்குகள் பொருந்தும்.

1. மிகைபடக் கூறும் கதைகள் பேச்சு மிகவும் கற்பனையானதாக, சாத்தியமில்லாத இயல்புடையதாக இருக்க வேண்டும் மற்றும் ஒரு கருப்பொருள் அல்லது கதை கொண்டிருக்க வேண்டும்.
2. பேச்சிற்கு உதவ அல்லது விளக்க நகைச்சுவை மற்றும் அரங்கத் துணைப்பொருட்கள் பயன்படுத்தப்படலாம்.

## காணொளிப் பேச்சுப் போட்டி

◆ 1. மாவட்டத்திற்குள் உட்படாத மன்றங்களின் உறுப்பினர்கள் (இடைப்பட்ட மாவட்டங்கள் உட்பட) காணொளிப் பேச்சுப் போட்டியில் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள். காணொளிகள் ஆங்கிலத்தில் இருக்கவேண்டும். காணொளிகள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும்.

   A. மாவட்டத்திற்கு உட்படாத மன்றங்களின் உறுப்பினர்கள் ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒரு மன்றத்திலும் உறுப்பினராக இருந்தால் காணொளிப் பேச்சுப் போட்டியில் பங்கேற்க மாட்டார்கள்.

2. அவைகளைப் பொருத்த வரையில் Toastmasters பன்னாட்டுப் பேச்சுப் போட்டி விதிகள் பின்பற்றப்பட வேண்டும்.

   A. காணொளிப் பேச்சுப் போட்டிகளுக்கு பகுதி, கோட்டம், மாவட்டம், அல்லது அரையிறுதிப் போட்டிகள் இல்லை, எந்த பயணப்படிகளும் இல்லை.

   B. போட்டியில் நுழைய, மன்றங்கள் ஒரு பேச்சுப் போட்டியை நடத்தி வெற்றிப் பேச்சின் காணொளிப் பதிவைச் சமர்பிக்க வேண்டும்.

3. ஒரு மன்றத்திற்கு ஒரு (1) பேச்சு மட்டுமே சமர்பிக்கலாம்.

   A. காணொளிப் பேச்சுப் போட்டியின் பதிவுகள் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்:

      - ஒலி எந்தவித எதிரொலிப்பு, தடங்கல் அல்லது கூடுதல் இரைச்சல் இல்லாமல் தெளிவாக இருக்க வேண்டும்.
      - ஒற்றை படக்கருவி அமைப்பு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது; பல படக்கருவிக் கோணங்களைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்படாது.
      - படக்கருவி போட்டியாளரின் தடையற்ற, குவிக்கப்பட்ட பார்வையைக் கொண்டிருக்க வேண்டும்.

- படக்கருவி தேவையற்ற இயக்கங்களைத் தவிர்க்க பொருத்தப்பட்டு இருக்கவேண்டும்.
- உருப்பெருக்கம் அனுமதிக்கப்படாது.
- பேசும் பகுதி முழுமையாக ஒளியூட்டப்பட்டிருக்க வேண்டும்.
- பேச்சாளரின் முக பாவங்கள் பேச்சு முழுமைக்கும் தெரிய வேண்டும்; படம் அதிக வெளிச்சமாக அல்லது அதிக இருட்டாக இருக்கக் கூடாது. பேச்சாளர் பேச்சு முழுவதும் சட்டகத்திற்குள் இருக்கவேண்டும்.
- படக்கருவியை நோக்கி இயற்கையான அல்லது செயற்கையான எந்த ஒளியமைப்பும் இருக்கக் கூடாது.
- இப்பதிவு போட்டியின் அமர்வுத்தலைவரால் வெற்றிபெற்ற போட்டியாளரின் பேச்சிற்கான அறிமுகம் மற்றும் வெற்றிபெற்ற முழு பேச்சினைக் கொண்டிருக்க வேண்டும்.
- இப்பதிவானது உரை, வரைகலை, படங்கள் அல்லது மேற்கண்ட தேவைகளை நிறைவுசெய்யாத ஏனையவற்றைச் சேர்ப்பது போன்ற எந்த வழியிலும் திருத்தப்பட்டிருக்கக்கூடாது.

B. காணொளிப் பேச்சுப் போட்டிப் பதிவுகள் ஒரு காணொளி சமர்ப்பிப்புக்கு இணைக்கப்படும் நேரலை URL கொண்ட ஒரு Video Speech Contest Entry Form (உருப்படி 1178, ஆங்கிலத்தில் மட்டும்)ஐப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

C. காணொளிப் பேச்சுப் போட்டிப் பதிவுகள் பதிவுப் படிவத்துடன் ஒரு முழுமையான Speaker's Certification of Eligibility and Originality (உருப்படி 1183, ஆங்கிலத்தில் மட்டும்) ஐ உள்ளடக்கவேண்டும்.

D. தகுதிபெற நுழைவுப் படிவங்கள் videospeechcontest@toastmasters.org க்கு மின்னஞ்சல் அனுப்பப்பட வேண்டும் மற்றும் உலகத் தலைமையகத்தில் 5 p.m. மலை நேரம், மார்ச் 31 க்கு முன்பாக பெறப்பட்டிருக்க வேண்டும்.

4. குறிப்பிட்ட போட்டி சுழற்சியில் 10 க்கும் அதிகமான தகுதிபெறும் காணொளி சமர்ப்பிப்புகளைப் பெற்றால்,வேறாக, கூடுதல் போட்டிகள் நடத்தப்படலாம்.

A. ஒவ்வொரு கூடுதல் போட்டியிலும் 10 போட்டியாளர்களுக்கு மேல் இருக்க மாட்டார்கள்.

B. நடைமுறைக்கு உட்பட்டு, ஒவ்வொரு கூடுதல் போட்டியிலும் போட்டியிடும் போட்டியாளர்களின் எண்ணிக்கை.

C. சமமாக இருக்கும்.ஒவ்வொரு கூடுதல் போட்டியிலிருந்தும் மூன்று (3) உயர்ந்த நிலைகளைப் பெற்ற போட்டியாளர்கள் அடுத்த நிலைக்கு முன்னேறிச் செல்வார்கள்.

5. ஒவ்வொரு கூடுதல் போட்டி மற்றும் போட்டியின் இறுதி நிலைக்கு குறைந்தது ஐந்து (5) வாக்களிக்கும் நடுவர்கள், ஒரு (1) சமநிலையில் சீர்தூக்கும் நடுவர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

   A. வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும் சமநிலை சீர்தூக்கும் நடுவர் சர்வதெச பேச்சுப்போட்டியின் தகுதி பெறுவதற்கானதேவைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

      1. வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும் சமநிலை சீர்தூக்கும் நடுவர் காணொளிப் பேச்சுப் போட்டியில் நேரடியாக கலந்துகொள்ள மாட்டார்கள்.

      2. பதவிக்காலம் முடிந்து சென்று இரண்டு ஆண்டுகளான சர்வதேச தலைவர் அனைத்துக் காணொளி பேச்சுப் போட்டிகளுக்கும் தலைமை நடுவராக இருப்பார்.

         a) பதவிக்காலம் முடிந்து சென்று இரண்டு ஆண்டுகளான சர்வதேச தலைவர்தலைமை நடுவராக பணியாற்ற இயலவில்லை எனில், முதல் துணைத் தலைவர் மற்றொரு கடந்தகால பன்னாட்டுத் தலைவரைநியமிப்பார்.

   B. காணொளிப் பேச்சுப் போட்டிக்கு நேரக் கணக்காளர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள்.

      1. போட்டிகள் மன்ற அளவில் நேரக் கணக்கிடப்படும் மற்றும் காணொளிகள் தகுதிபெற சீராய்வு செய்யப்படும்போது சரிபார்க்கப்படும்.

         a) நேரத் தேவைகளை பூர்த்தி செய்யாத பேச்சுக்கள்தலைமை நடுவரால் சீராய்வு செய்யப்படும். போட்டியாளர் கூடுதல் நேரம் அல்லது குறைவான நேரம் எடுத்துக்கொண்டதாக தலைமை நடுவர் தீர்மானித்தால்வீடியோ சமரிப்பிப்பு ஏற்றுக்கொள்ளப்படாது.

# பேச்சுப் போட்டி சோதனைப் பட்டியல்கள்

பேச்சுப்போட்டிகள் கவனமாகத் திட்டமிடப்பட வேண்டும் மற்றும் தொழில்முறையாக நடத்தப்பட வேண்டும். சோதனைப்பட்டியல்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை ஆனால் தீவிரமாகப் பரிந்துரைப்படுகின்றன.

## போட்டி அமர்வுத்தலைவரின் சோதனைப் பட்டியல்

ஒரு போட்டியின் அமர்வுத்தலைவராக நீங்கள் போட்டியின் வரவுசெலவைத் திட்டமிட வேண்டும், அறை மற்றும் ஒலி ஏற்பாடுகள் செய்ய வேண்டும், போட்டிக்கு முந்தைய மற்றும் பிந்தைய விளம்பர நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும், மற்றும் நிகழ்விற்கான அனைத்து இரசீதுகளுக்கும் உடனடியாகப் பணம் செலுத்தப்பட்டதா எனப் பார்க்க வேண்டும். நீங்கள் ஒவ்வொரு பேச்சாளரும் போட்டியிடத் தகுதியுடையவர் மற்றும் போட்டி விதிகளை அறிந்திருக்கிறா், ஒலிஒளிக் கருவிகள் வேலை செய்கின்றன, தலைமை நடுவர், வாக்களிக்கும் நடுவர்கள், நேரக் கணக்காளர்கள், வாக்குச்சீட்டு கணக்காளர்கள் ஆகியோர் அவர்களின் பணிகள் குறித்து விளக்கப்பட்டனர், வாக்குச்சீட்டுகள் கவனமாக எண்ணப்பட்டன, மற்றும் வெற்றியாளர்களுக்கான பரிசுகள் அவர்கள் பெருமையடையும் விழாக்களில் வழங்கப்பட்டன ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த வேலைகளில் உங்களுக்கு உதவுவதற்காக ஒரு குழு இருந்தாலும், அவை செய்து முடிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது உங்களின் பொறுப்பாகும்.

### தயாராதல்

1. போட்டியின் வரவு மற்றும் செலவுகள் சரிசமமாக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொண்டு போட்டிக்கான வரவுசெலவுத் திட்டத்தைத் நிர்ணயிங்கள். விருதுகள், போட்டி பொருட்கள், வைப்புகள், உணவுகள், அச்சிடல், அஞ்சல் செலவு போன்ற செலவுகளைக் கருத்துல் கொள்ளுங்கள். குறிப்பு: போட்டியில் கலந்துகொள்ள நுழைவுக் கட்டணம் இருந்தால், போட்டியாளர்களுக்கு அக்கட்டணத்தில் விலக்கு அளிக்கப்பட வேண்டும். போட்டியாளர்கள் போட்டியில் கலந்துகொள்ள கட்டணம் வசூலிக்கக் கூடாது.

2. பேச்சுப் போட்டிக்கான இடம் மற்றும் நேரத்தைத் தேர்ந்தெடுங்கள் மற்றும் முறையான Toastmasters அதிகாரியுடன் தேர்வு குறித்து ஒருங்கிணைந்து செயல்படுங்கள்.
3. போட்டிக்கான நிகழ்ச்சி நிரலை நிர்ணயிங்கள்.
4. நிகழ்ச்சிக்குத் தேவையான வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.
5. அனைத்து போட்டிப் பேச்சாளர்களுக்கும் சான்றிதழ்களை order செய்யுங்கள், மற்றும் வெற்றியாளர்களுக்கு உலகத் தலைமையகத்திலிருந்து கோப்பைகளை ஆர்டர் (order) செய்யுங்கள். குறிப்பு: உலகத் தலைமையகத்திலிருந்து கொள்முதல் செய்யப்படாத பேச்சுப் போட்டிப் பரிசுகளில் Toastmasters இலச்சினை மற்றும் "Toastmasters" என்ற சொல்லை இடுவது வணிகமுத்திரை மீறல் ஆகும்.
6. Toastmasters International பேச்சுப் போட்டி பொருட்கள் இங்கு இலவசப் பதிவிறக்கத்திற்குக் கிடைக்கின்றன www.toastmasters.org:
   - Speaker's Certification of Eligibility and Originality (உருப்படி 1183, ஆங்கிலத்தில் மட்டும்)
   - Speech Contest Time Record Sheet and Instructions for Timers (உருப்படி 1175, ஆங்கிலத்தில் மட்டும்)
   - நடுவரின் வழிகாட்டி மற்றும் வாக்குச்சீட்டு
   - Judge's Certification of Eligibility and Code of Ethics (உருப்படி 1170, ஆங்கிலத்தில் மட்டும்)
   - Counters' Tally Sheet (உருப்படி 1176, ஆங்கிலத்தில் மட்டும்)
   - சமநிலையில் சீர்தூக்கும் நடுவரின் வழிகாட்டி மற்றும் வாக்குச்சீட்டு
   - Speech Contestant Profile (உருப்படி 1189, ஆங்கிலத்தில் மட்டும்)
   - Results Form (உருப்படி 1168, ஆங்கிலத்தில் மட்டும்)
7. தலைமை நடுவரைத் தேர்ந்தெடுங்கள். ஒரு தலைமை நடுவருக்குத் தேவையான தகுதிகளுக்கு இந்த விதிப்புத்தகத்தின் தகுதி பிரிவைப் பாருங்கள்.
8. ◆ அவைக் காவலர், இலக்குப் பேச்சாளர் அல்லது பிற பங்களிப்புகள் உட்பட போட்டிக்குத் தேவையான துணைப் பங்களிப்புகளை நியமிக்கவும்.
   ◆ A. துணைப் பங்களிப்புகளில் பணியாற்றும் உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களின் பொறுப்புகளைப் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.
9. போட்டி மற்றும் போட்டிக்கு முந்தைய விளக்கம் ஆகியவற்றின் நேரம் மற்றும் இடத்தை போட்டி அதிகாரிகளுக்குத் தெரிவியுங்கள். (போதிய அளவு நேரம் கொடுங்கள். எ.கா., மன்றப் போட்டிகளுக்கு இரண்டு வாரங்கள்)

10. போட்டி மற்றும் போட்டிக்கு முந்தைய விளக்கம் ஆகியவற்றின் நேரம் மற்றும் இடத்தை போட்டியாளர்களுக்கு இரண்டிலிருந்து (2) ஆறு (6) வாரங்களுக்கு முன்பாகத் தெரிவியுங்கள். இந்த நேரத்தில் ஒவ்வொரு போட்டியாளருக்கும் ஒரு தகவல் தொகுப்பை வழங்குங்கள். இந்தத் தொகுப்பு இவற்றைக் கொண்டிருக்கும்:
    - *பேச்சுப்போட்டி விதிப்புத்தகம்.* (உருப்படி ta-IN1171)
    - Speech Contestant Profile (உருப்படி 1189, ஆங்கிலத்தில் மட்டும்)
    - Speaker's Certification of Eligibility and Originality (உருப்படி 1183, ஆங்கிலத்தில் மட்டும்)
11. ஊடகங்களுக்கு செய்தி வெளியீடுகளை வழங்குவதின் மூலம் உங்கள் சமூகத்தில் போட்டியை விளம்பரப்படுத்துங்கள்.
12. போட்டிக்கு முன்பாக ஒவ்வொரு போட்டியாளரின் தகுதியையும் போட்டி விதிகளின் கீழ் உறுதிப்படுத்துங்கள், தேவையெனில் தகுதியிழப்பு குறித்து போட்டியாளர்களுக்குத் தெரிவியுங்கள். போட்டியாளர்களின் தகுதியைச் சரிபார்ப்பதற்கு:
    - ◆ உறுப்பினர் தகுதியை உறுதிப்படுத்தவும்: மன்ற அதிகாரிகள் மற்றும் மாவட்டத் தலைவர்கள், ஒரு போட்டியாளர் ஒரு கட்டணம் செலுத்திவிட்ட மன்றத்தின் கட்டணம் செலுத்திவிட்ட உறுப்பினரா, அல்லது தற்போதைய மாவட்டத் தலைவரா என்பதை நிர்ணயிக்க, **www.toastmasters.org** ன் Leadership Central (தலைமைத்துவ மையத்தில்) உள்ள தகுதிகாண் உதவியாளரைப் பயன்படுத்தலாம்.
    - ◆ கல்விநிலையை சரிபார்த்தல்: உறுப்பினர் சர்வதேச பேச்சுப் போட்டியில் போட்டியிடுவதாக இருந்தால், அவர் Toastmasters Pathways கற்றல் அனுபவத்தில் ஏதேனும் ஒரு பாதையின் நிலைகள் 1 மற்றும் 2-ஐ முடித்து, சான்றிதழ் பெற்றிருக்கிறார் அல்லது ஒரு மேன்மைமிகு சொல்வேந்தர் விருதினைப் பெற்றிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தவும். உலகத் தலைமையகத்தில் உள்ள பேச்சுப் போட்டிகள் குழுவை **speechcontests@toastmasters.org** என்னும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளுங்கள்.

## போட்டியாளர் விளக்கம்

1. அனைத்துப் போட்டியாளர்களின் இருப்பையும் அவர்களது பெயர்களின் உச்சரிப்பையும் சரிபார்க்கவும்.குறிப்பு: வாக்குச்சீட்டுகள் சேகரிக்கப்பட்டவுடன் ஒவ்வொரு போட்டியாளர்களிடமும் ஒரு முறைசாரா நேர்காணலையும் நீங்கள் நடத்த வேண்டும்.
2. பேச்சுப் போட்டி விதிகளை பேச்சாளர்களுடன் சீராய்வு செய்யுங்கள்.
3. Speaker's Certification of Eligibility and Originality (உருப்படி 1183, ஆங்கிலத்தில் மட்டும்) ஐ சீராய்வு செய்யுங்கள். போட்டியாளர்கள் இந்தப் படிவத்தில் கையொப்பமிடுவதின் மூலம் அவர்கள் தகுதி மற்றும் சுயமான படைப்பு குறித்த விதிகளைப் படித்துப் புரிந்துகொள்கிறார்கள்

என்று சான்றளிக்கிறார்கள் என்பதைப் போட்டியாளர்களுக்கு நினைவூட்டுங்கள்.

4. காலநேர நெறிமுறையைப் பேச்சாளர்களுடன் சீராய்வு செய்யுங்கள்.
5. போட்டியாளர்களை சாய்மேசை, மேசைகள், ஒளியமைப்பு, ஒலிவாங்கி போன்ற துல்லியமான பேசும் பகுதிகளுக்குப் பழக்கப்படுத்துங்கள். அனைத்துப் போட்டியாளர்களும் போட்டிக்கு முன்பாக ஒலிபெருக்கக் கருவிகளைச் சோதிக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்க வேண்டும்.
6. பேசும் நிலைக்கான குலுக்கலை நடத்துங்கள்.

## போட்டியின் போது

1. ஒரு விரிவான அறிமுகத்துடன் போட்டியைத் தொடங்குங்கள். அவையோருக்குத் தெரிவியுங்கள்:
   - தலைமை நடுவர் மற்றும் போட்டியாளர்களுடன் விதிகள் சீராய்வு செய்யப்பட்டன.
   - காலநேர விளக்குகள் அமைவிடம் குறித்து போட்டியாளர்கள் தெரிவிக்கப்பட்டனர்.
   - பேச்சுகளின் போது படம் எடுப்பது அனுமதிக்கப்படவில்லை.
   - ஒவ்வொரு போட்டியாளரும் அவர்களின் சொந்த பேச்சுத் தலைப்புகளைத் தேர்ந்தெடுப்பார்கள். சில உள்ளடக்கம் தனிப்பட்ட இயல்புடையதாக இருக்கலாம் மற்றும் சில அவையோர்கள் உணர்ச்சி மிக்கதாகக் கருதக்கூடிய மொழி, யோசனைகள் அல்லது நம்பிக்கைகளைக் கொண்டிருக்கலாம்.
2. ஒவ்வொரு போட்டிப் பேச்சாளரையும் அறிமுகப்படுத்துங்கள். எந்தப் பேச்சாளர் அல்லது அவரது பேச்சின் தலைப்பு குறித்தும் முதல்நிலைக் கருத்துகளை வெளியிடாதீர்கள், அல்லது பேச்சாளரின் மன்றம் அல்லது வசிப்பிடத்தின் பெயர் அல்லது அமைவிடத்தைக் குறிப்பிடாதீர்கள். ஒவ்வொரு போட்டியாளரையும் மெதுவாக மற்றும் தெளிவாக அறிமுகப்படுத்துங்கள்.
3. பேச்சுகளை முடித்த பின், வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவரை அவர்களின் வாக்குச்சீட்டுகளை முடிக்குமாறு கேளுங்கள். இந்த நேரத்தில், வாக்குச்சீட்டு கணக்காளர்கள், வாக்களிக்கும் நடுவர்களின் வாக்குச்சீட்டுகளைச் சேகரிப்பார்கள் மற்றும் தலைமை நடுவர் நேரக் கண்காணிப்பாளர்களிடமிருந்து நேரப் பதிவுத் தாளைச் சேகரித்து சரிபார்ப்பார், மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவரின் வாக்குச்சீட்டைச் சேகரிப்பார். அனைத்து வாக்குச்சீட்டுகளும் நேரப் பதிவுத் தாள்களும் சேகரிக்கப்பட்ட பின், தலைமை நடுவர் மற்றும் வாக்குச்சீட்டு கணக்காளர்கள் வாக்குச்சீட்டுகளை எண்ணும் அறைக்குச் செல்வார்கள்.

- அனைத்து வாக்குச்சீட்டுகள், வாக்குச்சீட்டு கணக்காளர்கள் கூட்டல் தாள்கள், மற்றும் நேரப் பதிவுத்தாள்கள் இரகசியமானவையாகக் கருதப்படுகின்றன.
- அனைத்துப் படிவங்களையும் அழிக்க தலைமை நடுவரிடம் வழங்குங்கள்.
- வெற்றியாளர் அல்லது மாற்று வெற்றியாளர் அடுத்த நிலைக்குப் போட்டியிட இயலவில்லையெனில், அனைத்து போட்டியாளர்களின் தரநிலையைக் காட்டும் பட்டியலை வைத்திருங்கள்.

4. வாக்குச்சீட்டு கணக்காளர்கள் வாக்குச்சீட்டுகளை எண்ணும்போது, போட்டியின் அமர்வுத்தலைவர் ஒவ்வொரு பேச்சாளரையும் நேர்காணல் செய்வார்.
    - போட்டிப் பேச்சுகள் முடிவடைந்த பின், முடிவுகள் கணக்கிடப்படும்போது, போட்டியாளர்களை மீண்டும் ஒருமுறை அறிமுகப்படுத்துங்கள், அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மன்றம், பகுதி, மற்றும் மாவட்டத்தைக் கூறுங்கள் மற்றும் அவர்களுக்கான பங்கேற்புச் சான்றிதழை வழங்குங்கள். இந்த நேரத்தில், போட்டியாளர்களின் வாழ்க்கைத் தகவல்களை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி ஒரு குறுகிய நேர்காணல் நடத்தலாம்.
5. நேர்காணல்கள் முடிவடைந்ததும் போட்டியின் முடிவுகளைத் தலைமை நடுவரிடமிருந்து சேகரியுங்கள்.
6. ◆ ஏதேனும் எதிர்ப்புகள் இருப்பின் அவற்றை எதிர்கொள்ளுங்கள். வாக்களிக்கும் நடுவர்கள் மற்றும் போட்டியாளர்கள் மட்டுமே எதிர்ப்புகள் கொடுக்கலாம். தலைமை நடுவர், போட்டியின் அமர்வுத்தலைவர், வாக்களிக்கும் நடுவர்கள், மற்றும் போட்டியாளர்கள் ஆகியோர் அவையோர்களிடமிருந்து வரும் எதிர்ப்புகளைக் கருதக்கூடாது. எந்த எதிர்ப்பும் வெற்றியாளர்(கள்) மற்றும் மாற்று(களை) அறிவிக்கும் முன்பாக தலைமை நடுவர் மற்றும்/அல்லது போட்டியின் அமர்வுத்தலைவரிடம் பதிவு செய்யப்பட வேண்டும். நிகழ்வு முடிவடைந்தது என போட்டியின் அமர்வுத்தலைவர் அறிவிக்கும் முன்பாக சுயமான படைப்பாக இல்லததால் மற்றும் தகுதிகள் குறித்த தகுதியிழப்பை போட்டியாளர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். ஒரு போட்டியாளர் சுயமான படைப்பு, அல்லது மற்றொரு போட்டியாளரின் பேச்சைக் குறிப்பிட்டதற்காகத் தகுதியிழப்பு செய்யப்படுவதற்கு முன்பாக, வாக்களிக்கும் நடுவர்களிடம் பதிலளிப்பதற்கான ஒரு வாய்ப்பு அந்தப் போட்டியாளருக்கு வழங்கப்பட வேண்டும். தகுதியிழப்பு முடிவில் வாக்களிக்கும் நடுவர்களில் பெரும்பான்மை ஒப்புக் கொள்ள வேண்டும். போட்டியின் அமர்வுத்தலைவர் தகுதியின் அடிப்படையில் போட்டியாளரைத் தகுதியிழப்புச் செய்யலாம்.

7. முடிவுகளை அறிவிக்கும் முன்பாக, போட்டியின் அமர்வுத்தலைவர் காலநேரத் தகுதியிழப்பு நேர்ந்துள்ளதா என்பதை அறிவிக்க வேண்டும், ஆனால் அதில் ஈடுபட்ட போட்டியாளர்(களின்) பெயரை அறிவிக்கக்கூடாது. தலைமை நடுவர் அந்த விவகாரத்தைத் தகுதியிழந்த போட்டியாளர்(களுடன்) தனிப்பட்ட முறையில் கலந்துரையாடலாம்.
8. முடிவுரையில், இந்தப் போட்டியை வெற்றியாக்க உதவிய அனைவருக்கும் நன்றி கூறுங்கள்.

### போட்டிக்குப் பின்னர்

1. அனைத்துப் போட்டியாளர்களின் தொடர்பு விவரங்களையும் தலைமை நடுவருக்கு வழங்குங்கள், அவர் போட்டி வெற்றியாளர் அறிவிப்பு படிவத்தை (உருப்படி 1182) நிறைவு செய்வார்.
2. பொருந்தினால், ஒவ்வொரு வெற்றியாளரின் சமூக செய்தித்தாள் மற்றும் நிறுவனப் பதிப்புகளுக்கு செய்தி வெளியீடுகள் (முடிந்தால் புகைப்படங்களை) அனுப்புங்கள்.
3. போட்டி தொடர்பான அனைத்து இரசீதுகளுக்கும் உடனடியாகப் பணம் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்துங்கள்.

## தலைமை நடுவரின் சோதனைப் பட்டியல்

### போட்டிக்கு முன்பு

1. வாக்களிக்கும் நடுவர்கள், வாக்குச்சீட்டு கணக்காளர்கள், நேரக் கணக்காளர்கள், மற்றும் ஒரு இரகசிய சமநிலையில் சீர்தூக்கும் நடுவரை நியமித்து ஆலோசனை வழங்குங்கள்.
2. தலைமை வாக்குச்சீட்டுக் கணக்காளராகச் செயல்பட்டு ஒவ்வொரு வாக்குச்சீட்டுக் கணக்காளருக்கும் வாக்குச்சீட்டுக் கணக்காளரின் கூட்டல் தாள் (உருப்படி 1176) நகலை வழங்குங்கள்.
3. இணையத்தில் பேச்சுப் போட்டி பயிற்சியைப் பார்க்க அனைத்து பேச்சுப் போட்டி அதிகாரிகளையும் ஊக்கப்படுத்துங்கள் www.toastmasters.org/leadership-central/speech-contests/speech-contest-tutorials.
4. ◆ வாக்களிக்கும் நடுவர்கள், வாக்குசீட்டு கணக்காளர்கள், மற்றும் நேரக் கணக்காளர்களுக்கு நடுவர் விளக்கத்தை நடத்துங்கள். தலைமை நடுவரின் விருப்பத்தின் பேரில் நடுவரின் விளக்கவுரை நேரிலோ அல்லது இணையவழியிலோ நடத்தப்படலாம். முழுமையான விளக்கவுரைக்கான கூடுதல் திட்டமிடல் வாய்ப்புகளை எளிதாக்கும் வகையில் இணையவழி விளக்கவுரைகள் அனுமதிக்கப்படுகின்றன.

## நடுவர் விளக்கச் சோதனைப் பட்டியல்

1. ஒவ்வொரு வாக்களிக்கும் நடுவருக்கும் பின்வருனவற்றை வழங்குங்கள்:
   - பேசும் வரிசையில் போட்டியாளர்களின் பட்டியல்
   - நடுவரின் வழிகாட்டி மற்றும் வாக்குச்சீட்டு
   - *பேச்சுப்போட்டி விதிப்புத்தகம்.* (உருப்படி ta-IN1171)
   - Judge's Certification of Eligibility and Code of Ethics (உருப்படி 1170, ஆங்கிலத்தில் மட்டும்)
2. வெளிப்புற இடையூறு அல்லது தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளதால் வாக்களிக்கும் நடுவர்களை போட்டிப் பகுதிக்கு அருகில் அமர அறிவுறுத்துங்கள்.
3. நடுவரின் வழிகாட்டி மற்றும் வாக்குச்சீட்டு மற்றும் பேசும் பகுதியைச் சீராய்வு செய்யுங்கள்.
4. Counters' Tally Sheet (உருப்படி 1176, ஆங்கிலத்தில் மட்டும்) பயன்படுத்துவது குறித்து வாக்குச் சீட்டுக் கணக்காளர்களுக்கு விளக்குங்கள்.
5. Speech Contest Time Record Sheet and Instructions for Timers (உருப்படி 1175, ஆங்கிலத்தில் மட்டும்) ஐ சீராய்வு செய்யுங்கள்
6. நேரக் கணக்காளருக்கு ஒரு நிறுத்துக் கடிகாரம் வழங்குங்கள்.
7. தேவையெனில், நேரக் கருவியை முறையாகப் பயன்படுத்துவது குறித்து நேரக் கணக்காளருக்கு விளக்குங்கள்.

## போட்டியின் போது

1. நேரக்கணக்காளர்களிடமிருந்து Speech Contest Time Record Sheet and Instructions for Timers (உருப்படி 1175, ஆங்கிலத்தில் மட்டும்) ஐ சேகரியுங்கள்.
2. சமநிலையில் சீர்தூக்கும் நடுவரிடமிருந்து சமநிலையில் சீர்தூக்கும் நடுவரின் வழிகாட்டி மற்றும் வாக்குச்சீட்டைச் சேகரியுங்கள்.
3. எழக்கூடிய ஏதேனும் தகுதி அல்லது அசல்தன்மை எதிர்ப்புகளைத் தீர்த்து வையுங்கள்.
4. வாக்குச்சீட்டு கணக்கிடும் செயல்முறையை மேற்பார்வை செய்யுங்கள். துல்லியத்தன்மையை உறுதிப்படுத்த அனைத்து வாக்குச்சீட்டுகளும் இருமுறை எண்ணப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துங்கள்.
5. அனைத்துப் போட்டியாளர்களின் தரநிலையையும் காட்டும் பட்டியலை போட்டியின் அமர்வுத்தலைவரிடம் வழங்குங்கள்.

# போட்டியாளரின் சோதனைப் பட்டியல்

## போட்டிக்கு முன்பு

1. பன்னாட்டு, நகைச்சுவை, மற்றும் மிகைபடக் கூறும் கதைகள் போட்டிகளுக்கு, ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து உங்கள் சொந்த, குறிப்பிடத்தக்க அளவு மூலப் பேச்சினைத் தயார் செய்யுங்கள்.
2. போட்டியாளர் விளக்கத்தில் கலந்து கொள்ளுங்கள்.
3. நீங்கள் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ள ஏதேனும் அரங்கத் துணைப்பொருட்கள் பற்றி போட்டியின் அமர்வுத்தலைவருக்குத் தெரிவியுங்கள்.
4. Speaker's Certification of Eligibility and Originality (உருப்படி 1183, ஆங்கிலத்தில் மட்டும்) ஐ சீராய்வு செய்யுங்கள். இந்தப் படிவத்தில் கையொப்பமிடுவதின் மூலம், நீங்கள் தகுதி மற்றும் சுயமான படைப்பு குறித்த விதிகளைப் படித்துப் புரிந்துகொள்கிறீர்கள் என்று சான்றளிக்கிறீர்கள்.
5. பேச்சாளர் ஒத்திகையில் கலந்துகொள்ளுங்கள் மற்றும் பேசும் பகுதியைக் குறித்துக் கொள்ளுங்கள்.

## போட்டியின் போது

1. உங்கள் அறிமுகத்திற்கு முந்தைய ஒரு (1) நிமிட அமைதியில் ஏதேனும் மற்றும் அனைத்து அரங்கத் துணைப்பொருட்கள் மற்றும் காட்சிக் கருவிகளை அமைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அரங்கத்துணைப்பொருட்களுடன் உங்களுக்கு உதவுவதற்காக ஒருவரைச் சேர்த்துக் கொள்ளலாம், ஆனால் இவ்வாறு செய்வது போட்டியின் அமர்வுத்தலைவர் அல்லது ஏனைய போட்டி அதிகாரிகளின் பொறுப்பல்ல.
2. உங்கள் அறிமுகத்திற்குப் பின், பேசும் இடத்திற்கு உடனடியாகச் சென்று உங்கள் பேச்சைத் தொடங்குங்கள்.
3. உங்கள் பேச்சின் போது காலநேரச் சமிக்ஞைகளை அவ்வப்போது சரிபாருங்கள். நீங்கள் ஒரு சிவப்பு சமிக்ஞையைப் பார்த்தால், உடனே சென்று விடுங்கள், நீங்கள் உங்கள் பேச்சை முடிக்கவில்லை என்றாலும் கூட.
4. உங்கள் பேச்சைத் தொடர்ந்து, ஏதேனும் அரங்கத் துணைப்பொருட்கள் அல்லது காட்சி உதவிகளைப் பேசும் பகுதியிலிருந்து உடனடியாக அகற்றுங்கள். நீங்கள் அரங்கத் துணைப்பொருட்களுடன் உங்களுக்கு உதவுவதற்காக ஒருவரைச் சேர்த்துக் கொள்ளலாம், ஆனால் இவ்வாறு செய்வது போட்டியின் அமர்வுத்தலைவர் அல்லது ஏனைய போட்டி அதிகாரிகளின் பொறுப்பல்ல.

# பேச்சுப் போட்டி பொருட்கள்

இலவச மின்னிலக்க உள்ளடக்கமாகப் பதிவிறக்க பேச்சுப் போட்டி பொருட்கள் இங்கு கிடைக்கின்றன: https://www.toastmasters.org/Speech-Contest-Kits.

## அனைத்து போட்டிகளுக்கும்

| பங்கு | உருப்படி | உருப்படி எண் |
|---|---|---|
| அனைத்து பங்கேற்பாளர்கள் | பேச்சுப் போட்டி விதிப்புத்தகம் | (உருப்படி ta-IN1171) |
| தலைமை நடுவர் | Notification of Contest Winner | (உருப்படி 1182, ஆங்கிலத்தில் மட்டும்) |
| | Results Form | (உருப்படி 1168, ஆங்கிலத்தில் மட்டும்) |
| வாக்களிக்கும் மற்றும் சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் | Judge's Certification of Eligibility and Code of Ethics | (உருப்படி 1170, ஆங்கிலத்தில் மட்டும்) |
| வாக்குச்சீட்டு கணக்காளர் | Counter's Tally Sheet | (உருப்படி 1176, ஆங்கிலத்தில் மட்டும்) |
| நேரக் கணக்காளர் | Speech Contest Time Record Sheet and Instructions for Timers | (உருப்படி 1175, ஆங்கிலத்தில் மட்டும்) |
| போட்டியாளர் | Speaker's Certification of Eligibility and Originality | (உருப்படி 1183, ஆங்கிலத்தில் மட்டும்) |
| | Speech Contestant Profile | (உருப்படி 1189, ஆங்கிலத்தில் மட்டும்) |

## பன்னாட்டுப் பேச்சுப் போட்டி

| பங்கு | உருப்படி | உருப்படி எண் |
|---|---|---|
| வாக்களிக்கும் நடுவர் | International Speech Contest Judge's Guide and Ballot | (உருப்படி 1172, ஆங்கிலத்தில் மட்டும்) |
| சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் | International Speech Contest Tiebreaking Judge's Guide and Ballot | (உருப்படி 1188, ஆங்கிலத்தில் மட்டும்) |
| போட்டியாளர் | Region Quarterfinals Video Release Form | (உருப்படி 1193, ஆங்கிலத்தில் மட்டும்) |

## மதிப்பீட்டுப் போட்டி

| பங்கு | உருப்படி | உருப்படி எண் |
|---|---|---|
| வாக்களிக்கும் நடுவர் | Evaluation Contest Judge's Guide and Ballot | (உருப்படி 1179, ஆங்கிலத்தில் மட்டும்) |
| சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் | Evaluation Contest Tiebreaking Judge's Guide and Ballot | (உருப்படி 1179A, ஆங்கிலத்தில் மட்டும்) |
| போட்டியாளர் | Evaluation Contestant Notes | (உருப்படி 1177, ஆங்கிலத்தில் மட்டும்) |

## நகைச்சுவைப் பேச்சுப் போட்டி

| பங்கு | உருப்படி | உருப்படி எண் |
|---|---|---|
| வாக்களிக்கும் நடுவர் | Humorous Speech Contest Judge's Guide and Ballot | (உருப்படி 1191, ஆங்கிலத்தில் மட்டும்) |
| சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் | Humorous Speech Contest Tiebreaking Judge's Guide and Ballot | (உருப்படி 1191A, ஆங்கிலத்தில் மட்டும்) |

### உடனடிப் பேச்சுப் போட்டி

| பங்கு | உருப்படி | உருப்படி எண் |
|---|---|---|
| வாக்களிக்கும் நடுவர் | Table Topics Contest Judge's Guide and Ballot | (உருப்படி 1180, ஆங்கிலத்தில் மட்டும்) |
| சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் | Table Topics Contest Tiebreaking Judge's Guide and Ballot | (உருப்படி 1180A, ஆங்கிலத்தில் மட்டும்) |

### மிகைபடக்கூறும் கதைகள் போட்டி

| பங்கு | உருப்படி | உருப்படி எண் |
|---|---|---|
| வாக்களிக்கும் நடுவர் | Tall Tales Contest Judge's Guide and Ballot | (உருப்படி 1181, ஆங்கிலத்தில் மட்டும்) |
| சமநிலையில் சீர்தூக்கும் நடுவர் | Tall Tales Contest Tiebreaking Judge's Guide and Ballot | (உருப்படி 1181A, ஆங்கிலத்தில் மட்டும்) |

# கூடுதல் வளங்கள்

### பேச்சுப் போட்டிகள் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

www.toastmasters.org/speechcontest FAQ

### பேச்சுப் போட்டி வழிகாட்டுதல்கள்

www.toastmasters.org/Leadership-Central/Speech-Contests/
Speech-Contest-Tutorials

### Policy 6.0: Speech Contests

www.toastmasters.org/Leadership-Central/Governing-Documents

TOASTMASTERS
INTERNATIONAL®

உருப்படி ta-IN1171